
THURKA STATIONERS
CHUNNAKAM

# சோதிடமலர்

## SOTHIDA MALAR




உள்ளே..........

* இரத்த அழுத்த நோயும் ஜோதிடமும்
* எண் சோதிடமும், அதன் உண்மைகளும்
* நடிகைகளில் ராணியாக வருவேனா?
* சந்தேக நிவிர்த்தி
* சோதிடம் கற்போம்

இன்னும் பல

க்ஷய ௵ கார்த்திகை ௴

(16-11-86—15-12-86)

விலை ரூபா 3-00

மாதவெளியீடு

உ

# சோதிடமலர்

# SOTHIDA MALAR

※

ஆசிரியர்:

பிரம்மஸ்ரீ கி. சதாசிவ சர்மா

(சம்ஸ்கிருத பண்டிதர்)

※

க்ஷய ஹூ கார்த்திகை மீ

( 16 - 11 - 86 )

மலர் 9 | இதழ் 8

பஞ்சானனாய பணிராஜ விபூஷிதாய
ஸ்வர்க் கோபவர்க்க பலதாய மஹேஸ்வராய |
ஹேமாம்சுகாய புவனத்ரய வந்திதாய
தாரித்ரய துக்க தஹநாய நமசிவாய ||

எம் பந்த வல்வினை நோய் தீர்த்திட்டு எமையாளும்
சம்பந்தன் காழியர் கோன் தன்னையும் ஆட்கொண்ட
[ருளி
அம்பு உந்து கண்ணாளும் தானும் அணிதில்லைச்
செம்பொன்செய் அம்பலமே சேர்ந்திருக்கை ஆயிற்றே!

* * *

சத்கருமம் எனப்படும் நல்லறத்தை நாம் உடனடியாகவே செய்யத்தொடங்க வேண்டும். துஷ்டரை நல்லோராக்குவதும், மூடரை அறிவாளியாக்குவதும், பகைவரை நண்பராக்குவதும், விஷத்தை அமுதமாக்குவதும் எக்கருமத்தால் கைகூடுமோ அச்செயலே நல்லறமாகும் சத்கருமமாகும். பிறருக்கு நன்மைதரக்கூடிய எல்லாம் நல்லறங்களாகவே அமைகின்றன.

## இம்மாத விசேடங்கள்:

### விநாயக ஷஷ்டி விரதம்

கார்த்திகைமாத கிருஷ்ணபக்ஷப் பிரதமை ஈறாகவுள்ள இருபத்தொரு தினங்களும் அனுஷ்டிக்கப்படும் விரதம் விநாயக பக்தர்களுக்குரியது.

கார்த்திகை கார்த்திகை கழிந்த நன்னாளில்
இருபத் தோரிழை யின்புறக்கட்டி
ஒருபோதுண்டி உண்டொரு மனமாய்
ஆதிவிநாயகற் கான வெழுத்தும்
மூன்றெழுத்ததனால் மொழிந்த மந்திரமும்

ஜெபித்து இருபது நாளும் இப்படி வழிபாடாற்றி இருபத்தோராவது தினம் உபவாசமிருந்து பெருங்கதையெனும் விநாயக சரித்திரங்களைப் படித்தும் கேட்டும் அப்பம், மோதகம், அவல், பணியாரம் முதலியவற்றை நிவேதித்து ஆராதனை செய்து மறுநாள் காலை காப்பவிழ்த்து நீரிலிட்டு பிரசாதம்பெற்று இன்புற்றிருக்கவேண்டும். மேலும் ஒருபோதுணவு உட்கொள்ளல் - பகலில் உபவாசம் இருந்து சந்திரோதய காலத்தில் (மாலை) சாதம் தவிர்த்து பலகாரம் அருந்துதலே முறையாகும். இச்சந்தர்ப்பங்களில் பால், பழம், இளநீர் அருந்துவதும் உப்பில்லாத உணவுட்கொள்ளுதல் முறையெனவும விரதநியமங்கள் கூறுகின்றன.

### சோமவார விரதம்

சிவபக்தர்களுக்குரிய இவ்விரதம் கார்த்திகை முதலாக சோமவாரம் (திங்கள்) தோறும் சிவனைக் குறித்தனுஷ்டிக்கப்பட வேண்டும். பகலில் உபவாசமிருந்து பகல் பதினைந்து நாழிகையின் மேல் போசனம் செய்யவேண்டும். இவ்விரதம் முறையே பன்னிரண்டு. மூன்று, ஒரு வருடகாலமாயினும் அனுஷ்டிக்கப்படவேண்டும். எனினும் கார்த்திகை மாத சோமவாரமே இதற்கு விசேடமானது. இக்காலங்களில் சிவனுக்கு பஞ்சாமிர்த அபிஷேகம் செய்வித்தலும், பிராமண போஜனமளித்தலும் விரத நியமங்களாகும்.

### திருக்கார்த்திகை விரதம்

கார்த்திகைமாத கார்த்திகை நட்சத்திரதினம் திருக்கார்த்திகை விரதத்திற்கும், பூரணைதினம் சர்வாலய தீபத்திற்குமுரிய காலமாகும். கார்த்திகை விரதம் முருகப்பெருமானின் வழிபாட்டுக்குரியது. இக்காலங்களில் தீபமேற்றல், தீபதர்சனம் செய்தல் பாபநீக்கத்திற்குரிய புண்ணியசெயல்களாகும். சிற்சக்தியாகிய தீபம் ஆன்மாவினது மலத்தைப் போக்கி ஞானத்தை(ஒளியை) அளிக்கின்றதென்பதே தீபமேற்றலின் தத்துவமாகும்.

# நாள் எப்படி?

கார் 1 ஞாயி (16-11-86) பூரணை மாலை 5-42 வரை, பரணி-மரணம் பகல் 10-46 வரை, பூரணைவிரதம், திருக்கார்த்திகை விரதம், ஸர்வாலயதீபம் சுபகருமங்கட்கு உகந்ததல்ல. ராகு 4-38—6-08

கார் 2 திங் (17-11-86) பிரதமை மாலை 7-48 வ; கார்த்திகை-மரணம் பகல் 1-16 வரை, கரிநாள், விநாயகவிரதாரம்பம். பகல் 1-16இன் மேல் அவசிய கருமங்கள் செய்யலாம், ராகு 7-38—9-08

கார் 3 செவ் (18-11-86) துவிதியை இரவு 10-08வ. ரோகிணி மாலை 4-02 வரை, அமிர்தசித்தம், வயற்கருமங்கள் மேற்கொள்ளலாம். ரா3-08—4-38

கார் 4 புத (19-11-86) திரிதியை இரவு 12-40 வ: மிருகசீரிடம் மாலை 6-57 வரை, சித்தம் சுபகருமங்கட்கு உகந்ததினம். ராகு 12-09—1-39

கார் 5 வியா (20-11-86) சதுர்த்தி பி.இ. 3-13 வ. திருவாதிரை-மரணம் இரவு 9-57 வரை, அசுபதினம். ராகு 1-30—3-09

கார் 6 வெள் (21-11-86) பஞ்சமி பி.இ. 5-42 வரை புனர்பூசம்-சித்தம் இரவு 12-54 வரை, முக்கிய கருமங்கள் செய்யலாம். ராகு 10-39—12-09

கார் 7 சனி (22-11-86) ஷஷ்டி முழுவதும், பூசம்-சித்தம் பி.இ. 3-37 வரை, அவசிய கருமங்கள் செய்யலாம்; ராகு 9-10—10-40

கார் 8 ஞாயி (23-11-86) ஷஷ்டி காலை 7-55 வரை, ஆயிலியம் பி.இ. 5-58 வரை. மரணம், அசுபதினம். ராகு 4-40—6-10

கார் 9 திங் (24-11-86) ஸப்தமி காலை 9-41 வரை, மகம் முழுவதும், மரணம், சுபதினமன்று; ராகு 7-40—9-10

கார் 10 செவ் (25-11-86) அஷ்டமி பகல் 10-51 வ. மகம் மாலை 7-44 வரை, சித்தம், கரிநாள். சுபகருமங்களை விலக்குக. ராகு 3-11—4-41

கார் 11 புத (26-11-86) நவமி பகல் 11-16 வரை, பூரம் காலை 8-49 வரை, அமிர்தம், பகல் 11-16ன் மேல் நற்கருமங்கள் செய்யலாம்; ராகு 12-12—1-42

கார் 12 வியா (27-11-86) தசமி பகல் 10-52 வரை, உத்தரம்-மரணம் காலை 9-06 வரை, சுபகருமங்கட்கு உகந்த தினம். ராகு 1-42—3-12

கார் 13 வெள் (28-11-86) ஏகாதசி காலை 9-39 வ. அத்தம் காலை 8-35 வரை, அமிர்தசித்தம், ஸர்வ ஏகாதசிவிரதம். சுபகருமங்கள் செய்யலாம். ராகு 10-43—12-13

கார் 14 சனி (29-11-86) துவாதசி காலை 7-39 வ. திரயோதசி பி.இ. 4-59 வரை, சித்திரை-மரணம் காலை 7-18 வரை, சுவாதி பி.இ. 5-21 வரை, சனிப்பிரதோஷவிரதம். சுபகருமங்கள் மேற்கொள்ளலாம். ராகு 9-13—10-43

கார் 15 ஞாயி (30-11-86) சதுர்த்தசி பி.இ. 1-47வ. விசாகம் பி.இ. 2-52 வரை, மரணம், சுபதினமன்று. ராகு 4-43—6-13

கார் 16 திங் (1-12-86) அமாவாசை இரவு 10-18வ: அனுஷம் பி.இ. 12-02 வரை, சித்தம், அமாவாசை விரதம். அசுபதினம். ராகு 7-43—9-13

கார் 17 செவ் (2-12-86) பிரதமை காலை 6-28 வ. கேட்டை-மரணம் இரவு 9-01 வரை, கரிநாள், சுபதினமன்று. ராகு 3-15—4-45

கார் 18 புத (3-12-86) துவிதியை பகல் 2-48 வரை, மூலம்-மரணம் மாலை 6-02 வரை, அசுபதினம்; ராகு 12-15—1-45

கார் 19 வியா (4-12-86) திரிதியை காலை 11-09வ. பூராடம் பகல் 3-16 வரை, சித்தம், சதுர்த்திவிரதம். சுபகருமங்கட்கு நன்றல்ல. ராகு 1-46—3-16

கார் 20 வெள் (5-12-86) சதுர்த்தி காலை 7-57 வ. பஞ்சமி பி.இ. 5-16 வரை, உத்தராடம்-சித்தம் பகல் 12-54 வரை, சுபகருமங்கள் செய்யலாம். ராகு 10-46—12-16

கார் 21 சனி (6-12-86) ஷஷ்டி பி.இ. 3-13 வரை, திருவோணம் பகல் 11-04 சித்தம், விநாயகஷஷ்டி விரதம். அவசிய கருமங்கள் மேற்கொள்ளலாம். ராகு 9-16—10-46

கார் 22 ஞாயி (7-12-86) ஸப்தமி பி.இ. 1-54 வரை, அவிட்டம்-மரணம் காலை 9-55 வரை, காலை 9-55 இன் மேல் முக்கிய கருமங்கள் செய்யலாம். ராகு 4-47—6-17

கார் 23 திங் (8-12-86) அஷ்டமி பி.இ. 1-21 வரை. சதயம்-சித்தம் காலை 9-28 வரை, திருவெம்பாவை பூஜாரம்பம் அசுபதினம். ராகு 7-47—9-17

கார் 24 செவ் (9-12-86) நவமி பி.இ. 1-38 வரை, பூரட்டாதி-மரணம் காலை 9-46 வரை, சுபதின மல்ல. ராகு 3-18—4-48

கார் 25 புத (10-12-86) தசமி பி.இ. 2-22 வரை, உத்தரட்டாதி-சித்தம் பகல் 10-46 வரை, சுபகரு மங்கட்கு நன்று. ராகு 12-19—1-49

கார் 26 வியா (11-12-86) ஏகாதசி பி.இ. 3-47 வ. ரேவதி பகல் 12-21 வரை, சித்தாமிர்தம், ஸர்வ ஏகாதசிவிரதம், சுபகருமங்கள் செய்யலாம். ராகு 1-49—3-19

கார் 27 வெள் (12-12-86) துவாதசி பி.இ. 5-37வ. அசுவினி பகல் 2-26 வரை அமிர்தசித்தம், பகல், 2-26க்கு முன் அவசிய கருமங்கள் செய்யலாம். ராகு 10-50—12-20

கார் 28 சனி (13-12-86) திரயோதசி முழுவதும், பரணி மாலை 4-52 வரை, சித்தாமிர்தம், பிர தோஷ விரதம், கார்த்திகைவிரதம். அசுபதினம். ராகு 9-20—10-50

கார் 29 ஞாயி (14-12-86) திரயோதசி காலை 7-46 வரை; கார்த்திகை மாலை 7-34 வரை, சித்தம், சுபதினமன்று. ராகு 4-51—6-21

கார் 30 திங் (15-12-86) சதுர்த்தசி பகல் 10-07 வ. ரோகிணி இரவு 10-25 வரை, அமிர்தசித்தம், பூரணைவிரதம். பகல் 10-07 இன் மேல் நற்கரு மங்கள் செய்யலாம். ராகு 7-51—9-51

# இலங்கை சோதிட ஆய்வு மன்றம்

மேற்படி மன்றத்தின் 1986-ம் ஆண்டு ஐப்பசிமாதக் கூட்டம் 26-10-86ல் மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் சௌசன்ய மண்டபத்தில் கலாநிதி நா. சுப்பிரமணிய ஐயர் தலைமையில் காலை 10-30 மணியளவில் ஆரம்பமானது. தலைவர் தலைமைஉரையின் பின் சென்றகூட்ட அறிக்கையும் பொருளாளர் அறிக்கையும் வாசிக்கப்பட்டு சரியென ஏற்றுத் தலைவரால் கைச்சாத்திடப்பட்டது.

பின்னர் திரு. ஐயா சச்சிதானந்தம் அவர்கள் ''கல்வியும் பட்டமும்'' என்றதலைப்பில் ஓர் ஆய்வுக்கட்டுரை வாசித்தார். அது தொடர்பாக திரு. வே. இன்னத்துரை உயர்கல்விக்குரிய வேறுபல விதிகளைக்காட்டி விளக்கினர். அதில் சேசாஸ்திரி ஐயர் ஆராய்ச்சிகளின் முடிபுப்படி 2-ம்வீடு பொதுக்கல்வியையும், பேச்சுவன்மையையும் காட்டும், 8-ம்வீடு விடாமுயற்சியையும் ஊக்கத்தையும் காட்டும். 4-ம்வீடு உயர்கல்வியைக் காட்டும். 5-ம் வீடு அறிவுஞானத்தையும், 9-ம்வீடு சமயக்கல்வி, தத்துவக்கல்வியையும் காட்டும். 2-ம்வீடும் 9-ம் வீடும் தொடர்புபடுமாயின் உயர்கல்வியைக் காட்டும். சோதிடமன்னன் கிருஷ்ணமூர்த்தியின் ஆய்வுப்படி 4-ம்வீட்டு புத்திநாதன் 4,9,11ஐக் குறிகாட்டும் நட்சத்திரத்தில் இருப்பதும் அத்துடன் புதன் தொடர்பும் இருப்பின் உயர்கல்வியைக் காட்டும் என்றும் கூறினர்.

அடுத்து தலைவர் நா. சுப்பிரமணிய ஐயர் கலாநிதிப்பட்டம் பெற்றமையை கௌரவிக்கும் சிறப்புவைபவம் திரு. ப. நடராசா அதிபர் தலைமையில் ஆரம்பமானது. அப்போது மாவைஆதீன கர்த்தா திரு. சண்முகநாதக் குருக்கள் திரு. நா. சுப்பிரமணிய ஐயர் கலாநிதிப்பட்டம் பெற்றமையை விதந்து ஆசியுரை வழங்கினர். பின்னர் அவரைப் பாராட்டி திரு. வே. சின்னத்துரை திரு. சி. சிதம்பரநாதக் குருக்கள், பண்டிதர் சச்சிதானந்தம், திரு.S.S. நடராசா, திருஞானசம்பந்தன், திரு. A. T. பொன்னுத்துரை, திரு. வைரவப்பிள்ளை, திரு. க. சிவராசா முதலியோர் உரையாற்றினர். திரு. நா. சுப்பிரமணிய ஐயர் அவர்களின் பதிலுரையைத் தொடர்ந்து செயலாளர் திரு. நடராஜா நன்றியுரை கூறி, சங்கச்சார்பில் திரு. நா. சுப்பிரமணிய ஐயருக்கு ஓர் பொற்கிளி வழங்கினர்.

அடுத்த இதழில்!

## 1987-ம் ஆண்டு உங்களுக்கு எப்படி?

# உதயலக்னம் காணும் பதகம் (யாழ்ப்பாணம்)

க்ஷய ஹு கார்த்திகை மீ 1-ந் தேதி முதல் 30-ந் தேதி வரை. (16-11-86 முதல் 15-12-86 வரை)

| இங் நவம் | தமி கார் | வாரம் | விருச்சி ம.மி. முதல் (காலை) | விருச்சி ம.மி. வரை | தனுசு ம.மி. வரை (காலை) | மகரம் ம.மி. வரை (பகல்) | கும்பம் ம.மி. வரை (பகல்) | மீனம் ம.மி. வரை (பி.ப) | மேடம் ம.மி. வரை (மாலை) | இடபம் ம.மி. வரை (இரவு) | மிதுன ம.மி. வரை (இரவு) | கடகம் ம.மி. வரை (இரவு) | சிங்கம் ம.மி. வரை (பி.இ) | கன்னி ம.மி. வரை (பி.இ) | துலா ம.மி. வரை (பி.இ) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 16 | 1 | ஞாயி | 6 9 | 8 19 | 10 27 | 12 23 | 2 08 | 3 51 | 5 40 | 7 43 | 9 54 | 12 1 | 2 2 | 4 1 | 6 5 |
| 17 | 2 | திங் | 6 4 | 8 14 | 10 22 | 12 18 | 2 03 | 3 46 | 5 35 | 7 38 | 9 49 | 11 56 | 1 57 | 3 56 | 6 1 |
| 18 | 3 | செவ் | 6 2 | 8 11 | 10 19 | 12 15 | 2 00 | 3 43 | 5 32 | 7 35 | 9 46 | 11 53 | 1 54 | 3 53 | 5 58 |
| 19 | 4 | புதன் | 5 59 | 8 07 | 10 15 | 12 11 | 1 56 | 3 39 | 5 28 | 7 31 | 9 42 | 11 49 | 1 50 | 3 49 | 5 54 |
| 20 | 5 | வியா | 5 55 | 8 03 | 10 11 | 12 07 | 1 52 | 3 35 | 5 24 | 7 27 | 9 38 | 11 45 | 1 46 | 3 45 | 5 50 |
| 21 | 6 | வெள் | 5 51 | 7 59 | 10 07 | 12 03 | 1 48 | 3 31 | 5 20 | 7 23 | 9 34 | 11 41 | 1 42 | 3 41 | 5 46 |
| 22 | 7 | சனி | 5 47 | 7 55 | 10 03 | 11 59 | 1 44 | 3 27 | 5 16 | 7 19 | 9 30 | 11 37 | 1 38 | 3 37 | 5 42 |
| 23 | 8 | ஞாயி | 5 43 | 7 51 | 9 59 | 11 55 | 1 40 | 3 23 | 5 12 | 7 15 | 9 26 | 11 33 | 1 34 | 3 33 | 5 38 |
| 24 | 9 | திங் | 5 39 | 7 47 | 9 55 | 11 51 | 1 36 | 3 19 | 5 8 | 7 11 | 9 22 | 11 29 | 1 30 | 3 29 | 5 34 |
| 25 | 10 | செவ் | 5 35 | 7 43 | 9 51 | 11 47 | 1 32 | 3 15 | 5 4 | 7 7 | 9 18 | 11 25 | 1 26 | 3 25 | 5 30 |
| 26 | 11 | புதன் | 5 31 | 7 38 | 9 46 | 11 42 | 1 27 | 3 10 | 4 59 | 7 2 | 9 13 | 11 20 | 1 21 | 3 20 | 5 25 |
| 27 | 12 | வியா | 5 26 | 7 33 | 9 41 | 11 37 | 1 22 | 3 5 | 4 54 | 6 57 | 9 8 | 11 15 | 1 16 | 3 15 | 5 20 |
| 28 | 13 | வெள் | 5 21 | 7 30 | 9 38 | 11 34 | 1 19 | 3 2 | 4 51 | 6 53 | 9 5 | 11 12 | 1 13 | 3 12 | 5 17 |
| 29 | 14 | சனி | 5 18 | 7 26 | 9 34 | 11 30 | 1 15 | 2 58 | 4 47 | 6 49 | 9 1 | 11 8 | 1 9 | 3 8 | 5 13 |
| 30 | 15 | ஞாயி | 5 14 | 7 22 | 9 30 | 11 26 | 1 26 | 2 54 | 4 43 | 6 45 | 8 57 | 11 4 | 1 5 | 3 4 | 5 9 |
| 1 | 16 | திங் | 5 10 | 7 18 | 9 26 | 11 22 | 1 07 | 2 50 | 4 39 | 6 41 | 8 53 | 11 0 | 1 1 | 3 0 | 5 5 |
| 2 | 17 | செவ் | 5 6 | 7 14 | 9 22 | 11 18 | 1 03 | 2 46 | 4 35 | 6 37 | 8 49 | 10 56 | 12 57 | 2 56 | 5 1 |
| 3 | 18 | புதன் | 5 2 | 7 10 | 9 18 | 11 14 | 12 59 | 2 42 | 4 31 | 6 33 | 8 45 | 10 52 | 12 53 | 2 52 | 4 57 |
| 4 | 19 | வியா | 4 58 | 7 06 | 9 14 | 11 10 | 12 55 | 2 37 | 4 27 | 6 29 | 8 41 | 10 48 | 12 49 | 2 48 | 4 53 |
| 5 | 20 | வெள் | 4 54 | 7 02 | 9 10 | 11 06 | 12 51 | 2 34 | 4 23 | 6 25 | 8 37 | 10 44 | 12 45 | 2 44 | 4 49 |
| 6 | 21 | சனி | 4 50 | 6 58 | 9 06 | 11 02 | 12 47 | 2 30 | 4 19 | 6 21 | 8 33 | 10 40 | 12 41 | 2 40 | 4 45 |
| டிச 7 | 22 | ஞாயி | 4 46 | 6 54 | 9 02 | 10 58 | 12 43 | 2 26 | 4 15 | 6 17 | 8 29 | 10 36 | 12 37 | 2 36 | 4 41 |
| 8 | 23 | திங் | 4 42 | 6 50 | 8 58 | 10 54 | 12 39 | 2 22 | 4 11 | 6 13 | 8 25 | 10 32 | 12 33 | 2 32 | 4 37 |
| 9 | 24 | செவ் | 4 38 | 6 46 | 8 54 | 10 50 | 12 35 | 2 18 | 4 7 | 6 9 | 8 21 | 10 28 | 12 29 | 2 28 | 4 33 |
| 10 | 25 | புதன் | 4 34 | 6 42 | 8 50 | 10 46 | 12 31 | 2 14 | 4 3 | 6 5 | 8 17 | 10 24 | 12 25 | 2 24 | 4 29 |
| 11 | 26 | வியா | 4 30 | 6 38 | 8 46 | 10 42 | 12 27 | 2 10 | 3 59 | 6 1 | 8 13 | 10 20 | 12 21 | 2 20 | 4 25 |
| 12 | 27 | வெள் | 4 26 | 6 34 | 8 42 | 10 38 | 12 33 | 2 6 | 3 55 | 5 57 | 8 9 | 10 16 | 12 17 | 2 16 | 4 21 |
| 13 | 28 | சனி | 4 22 | 6 30 | 8 38 | 10 34 | 12 19 | 2 2 | 3 51 | 5 53 | 8 5 | 10 12 | 12 13 | 2 12 | 4 17 |
| 14 | 29 | ஞாயி | 4 18 | 6 26 | 8 34 | 10 30 | 12 15 | 1 58 | 3 47 | 5 49 | 8 1 | 10 8 | 12 9 | 2 8 | 4 13 |
| 15 | 30 | திங் | 4 14 | 6 22 | 8 30 | 10 26 | 12 11 | **1 54** | **3 43** | 5 45 | 7 57 | 10 4 | 12 5 | 2 4 | 4 9 |

*இப்பதகத்தின் உதவியுடன் ஒரு குழந்தை ஜனனமான நேரத்துக்குரிய இலக்கினத்தை இலகுவில் அறிந்து கொள்ளலாம்.

உ-ம்: கார்த்திகை 30உ (15-12-86) பகல் 2-00 மணிக்கு என்ன லக்னம்? தடித்த எழுத்திலுள்ளதை கவனிக்க. (1-54—3-43) மேடலக்னம்

# கார்த்திகை மாதக் கிரகநிலை

| மீனம் | மேடம் | இடபம் | மிதுனம் |
|---|---|---|---|
| ராகு | | | |
| கும்பம்: குரு | கார்த்திகை மாதக் கிரக நிலை | | கடகம் |
| மகரம்: செவ் | | | சிங்கம் |
| நெப் | சூ, யூரே, சனி | புத சுக் | கேது |
| தனுசு | விருச்சிகம் | துலாம் | கன்னி |

## கிரக மாற்றங்கள்

1வ (16-11-86) கும்-செவ்வாய் இரவு 8-36
20வ (5-12-86) விரு-புதன் பி.ப. 2-27
4வ புதன் உதயம்
8வ புதன் வக்ரத்தியாகம்
12வ சுக்கிரன் வக்கிரத்தியாகம்
4வ சனி அஸ்தமனம்

## சந்திரனது இராசிநிலை

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| கார் | 1வ | (16-11-86) | மாலை | 5-22 | முதல் | இடபம் |
| | 3வ | (18-11-86) | பி.இ. | 5-28 | ,, | மிதுனம் |
| | 6வ | (21-11-86) | மாலை | 6-10 | ,, | கடகம் |
| | 9வ | (24-11-86) | காலை | 5-57 | ,, | சிங்கம் |
| | 11வ | (26-11-86) | பகல் | 2-57 | ,, | கன்னி |
| | 13வ | (28-11-86) | இரவு | 8-01 | ,, | துலாம் |
| | 15வ | (30-11-86) | இரவு | 9-31 | ,, | விருச்சிகம் |
| | 17வ | (2-12-86) | இரவு | 9-01 | ,, | தனுசு |
| | 19வ | (4-12-86) | இரவு | 8-38 | ,, | மகரம் |
| | 21வ | (6-12-86) | இரவு | 10-24 | ,, | கும்பம் |
| | 23வ | (8-12-86) | பி.இ. | 3-37 | ,, | மீனம் |
| | 26வ | (11-12-86) | பகல் | 12-21 | ,, | மேடம் |
| | 28வ | (13-12-86) | இரவு | 11-31 | ,, | இடபம் |

**கிரகநிலை குறிக்க:-**

* 4-ம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள பதகத்தின்படி கார்த்திகை மீ 30 வ பகல் 2-00 மணிக்கு தனுசு லக்னம் என அறிந்து கொண்ட பின் 'மேடம்' என்ற கட்டில் 'ல' என்று குறித்துக் கொள்ளவும். கிரகநிலையை அனுசரித்து மாற்றமடைந்த கிரகங்களையும் கவனித்து கிரகநிலை குறிக்கவும். லக்னம் முதல் வலமாக 1 முதல் 12 வரை இலக்கமிடுக,

**மாதபலன்**

மாதம் பிறக்கும்போது கும்பம் லக்கினமாக அமைகின்றது. லக்கினத்தில் குரு இருப்பினும் லக்கினம் பாபகர்த்தரி யோகம் பெறுவதால் பொதுவாக அரசியல் விடயங்களில் தீர்க்கமான முடிவுகள் மேற்கொள்ள முடியாது போகும். லக்கினாதிபதி புரட்சிக் கிரகம் யுரேனசுடன் 10-ல் சஞ்சரிப்பதால் புரட்சி, யுத்த பீதி அதிகரிக்கலாகும். ஆட்சிபீடங்களிலுள்ளோர்க்கும் தாக்கங்கள் ஏற்படலாகும். சமய விடயங்களில் முன்னேற்றம் உண்டாகும்.

# நலந்தரும் கால ஹோரைகள்

**சூரிய ஹோரை:-** உத்தியோகம், வியாபாரம் செய்ய, அரசாங்கத்திடம் சலுகைபெற, பெரிய உத்தியோகத்தரைக் காண, அரசாங்க அலுவல்கள் தொடங்க. பிதா வர்க்கத்தாருடன் பேச்சுக்கள் நடத்த நலம்.

**சந்திர ஹோரை:-** ஸ்திரீகளைப்பற்றிப் பேசுவது, கேள்விகள் கேட்பது, கவர்ச்சியான பேச்சுக்களை ஆரம்பிக்க, மாதாவர்க்கத்தாருடன் பேச உசிதம்; தோம்பு சம்பந்தப்பட்ட நீண்டகால விஷயங்கள் இதில் செய்யக்கூடாது.

**செவ்வாய் ஹோரை:-** உள்ளக்கருத்துக்களை மறைமுகமாகவைப்பது நலம். பூமிச்செய்கைகள் (மண்ணைக் கிண்டுதல், கொத்துதல் போன்றன) செய்ய, போருக்குப்புறப்பட, ஓமம், அக்கினி சம்பந்தமான வேலை ஆரம்பிக்க, உடற்பயிற்சி முதலியனவற்றிற்கு நன்று.

**புதன் ஹோரை:-** வதந்திகள் அனுப்பவும், எழுத்து வேலைகளுக்கும், பரீக்ஷை எழுதவும், ஆராய்ச்சிகள் செய்யவும், வானொலித் தொடர்புகள் கொள்ளவும், புத்தகம் எழுதவும், வெளியிடவும் நன்று

**குரு ஹோரை:-** எல்லாவற்றிற்கும் நலம். பணக்காரர் தயவை நாடுவது, எல்லாச் சாமான்களையும் வாங்குவது, உத்தியோகங்கள், பணவிஷய விவரங்களைத் தொடங்க, ஆடை ஆபரணங்கள் சேர்க்க, காரியங்கள் தடையின்றி நடக்கக் கடன்களைப் பெறுவது, ஷராப் வியாபாரிகளுக்கும் விவசாய லாபங்களுக்கும் இந்த ஹோரை மிகவும் சிறந்தது. விருந்துக்கு நல்லதல்ல.

**சுக்கிர ஹோரை:-** சுபவேலைகள் நடத்த, பெண்களைப்பற்றிப்பேச, இன்பக்கேளிக்கைகள், விளையாட்டுப்பேச்சு, பெண்களுடன் உரையாடல், பொன்னுபரணங்கள், வாகனங்கள் கொள்வனவு செய்தல் இன்பக்கலைகள் தொடங்குதல், சோடனை வேலைகள் ஆரம்பித்தல் முதலியனவற்றிற்கு சிறந்தது.

**சனி ஹோரை:-** இவ்வோரை மிகக் கொடியது. இருந்தபோதிலும் நிலங்கள், அவை சம்பந்தப்பட்ட சொத்துக்களைப்பற்றி நடவடிக்கை எடுக்க, தோம்பு துறவுகளைப்பற்றிப் பேசவும் நல்லது;

## (கார்த்திகை மாதம் 1-ந் தேதி முதல் 30-ந் தேதி வரை)

(சூரிய உதயம் 6 மணி 08 நிமிஷம்)

| வாரம் | 6...08 7...08 | 7...08 8...08 | 8...08 9...08 | 9...08 10...08 | 10...08 11...08 | 11...08 12...08 | 12...08 1...08 | 1...08 2...08 | 2...08 3...08 | 3...08 4...08 | 4...08 5...08 | 5...08 6...08 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பகல் | | | | | | | | | | | | |
| ஞாயி | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி |
| திங்க | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய |
| செவ் | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி |
| புதன் | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் |
| வியா | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி· | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் |
| வெள் | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு |
| சனி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி |
| இரவு | | | | | | | | | | | | |
| ஞாயி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் |
| திங்க | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு |
| செவ் | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி |
| புதன் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி |
| வியா | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய |
| வெள் | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி |
| சனி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் |

குறிப்பு:- நீங்கள் செய்யவேண்டிய கருமம் என்ன, எந்த ஹோரையில் செய்வது நலம் என்பதை மேலே உள்ள குறிப்புகளில் ஆராய்ந்து குறிப்பிட்ட ஹோரை வரும் நேரத்தைப் பதகத்தில் பார்த்து அந்தநேரத்தில் குறிப்பிட்ட கருமத்தைச் செய்யவும். நிச்சயம் அனுகூலமாகும்;

# கார்த்திகை மாத வானியற் காட்சிகள்
# Astronomical Phenomena

16-11-86 — 15-12-86

சூரியன்: 16-11-86 பிற்பகல் மணி 1-40ல் விருச்சிகராசிப் பிரவேசம்.
16-11-86 உதயம் காலை 6-08 அஸ்தமனம் மாலை 5-42
15-12-86 உதயம் காலை 6-20 அஸ்தமனம் மாலை 5-47

சந்திரன்: 16-11-86 பூரணை மாலை 5-42
25-11-86 அபராஷ்டமி பகல் 10-01
1-12-86 அமாவாசை இரவு 10-13
3-12-86 சந்திரதர்சனம்
8-12-86 பூர்வாஷ்டமி இரவு 1-21

## கிரகங்கள்

புதன்: மாத ஆரம்பத்தில் அஸ்தமனமாயிருந்த இக்கிரகம் 19-11-86ல் கிழக்கில் உதயமாகும். 22-11-86ல் வக்கிரகதி நீங்கி நேர்கதியிற் செல்லத்தொடங்கும். 5-12-86ல் விருச்சிகராசியிற் பிரவேசிக்கிறது. 30-11-86ல் சூரியனிலிருந்து கூடியதூரம் 20பாகை உயரத்தில் உதயம் முன் கீழ்வானத்திற் காணப்படும். மாதமுடிவில் 15 பாகை உயரத்திற் காணப்படும்.

சுக்கிரன்: மாத ஆரம்பத்தில் உதயம் முன் கீழ்வானத்தில் 15பாகை உயரத்திற்காணப்படும் இக்கிரகம் 24-11-86ல் வக்கிரகதிநீங்கி நேர்கதியிற்செல்லும். 11-12-86ல் கூடிய பிரபையுடன் காட்சியளிக்கும். மாதமுடிவில் 41பாகை உயரத்திற்காணப்படும். இம்மாசம்முழுவதும் துலாராசியிலேயே சஞ்சரிக்கிறது.

செவ்வாய்: மாத ஆரம்பத்தில் சூரிய அஸ்தமனத்தின்பின் உச்சியிற் காணப்படும் இக்கிரகம் மாதமுடிவில் உச்சிக்கு மேற்கே 10பாகை சரிந்து காணப்படும். 16-11-86ல் கும்பராசியிற் பிரவேசிக்கிறது.

வியாழன்: மாத ஆரம்பத்தில் அஸ்தமனத்தின்பின் கீழ் வானில் 69பாகை உயரத்திற்காணப்படும் இக்கிரகம் மாதமுடிவில் 8பாகை சரிந்து உச்சிக்கு மேற்கில் காணப்படும். 28-11-86ல் கும்பராசியில் பூரட்டாதி 1-ம் பாதத்திற் செல்கிறது.

சனி: மாத ஆரம்பத்தில் சூரிய அஸ்தமனத்தின் பின் மேற்குவானில் 18பாகை உயரத்தில் தோற்றும் இக்கிரகம் 19-11-86ல் சூரிய சாமீப்பியத்தால் அஸ்தமனமடைந்துவிடும். விருச்சிக ராசியிற் சஞ்சரிக்கும் இக்கிரகம் 18-11-86ல் கேட்டை 1-ம் பாதத்திற் பிரவேசிக்கிறது.

இந்திரன்: விருச்சிகராசியில் கேட்டை 4-ம் பாதத்திற் சஞ்சரிக்கிறது.

வருணன்: தனுராசியில் மூலம் 4-ம் பாதத்திற் சஞ்சரிக்கிறது.

குபேரன்: துலாராசியில் சுவாதி 3-ம் பாதத்திற் சஞ்சரிக்கிறது.

## சமாகமாதிகள்

29-11-86 மாலை சந்திரனுக்கு வடக்கு சுக்கிரன் 2பாகை. மறுநாள் உதயம்முன் கீழ்வானில் அவதானிக்கவும்.

30-11-86 மாலை சந்திரனுக்கு வடக்கு புதன் 5பாகை. அன்று உதயம்முன் கீழ்வானில் அவதானிக்கவும்.

7-12-86 முன்னிரவு சந்திரனுக்கு வடக்கு செவ்வாய் 3பாகை.

8-12-86 காலையில் சந்திரனுக்கு தெற்கு வியாழன் 1½ பாகை. அஸ்தமனத்தின் பின் அவதானிக்கவும்.

### ஆசை

தொல்லை ஒன்றும்
இல்லை என்று
தில்லைச் சிவன்பால்
சிந்தைவைத் திருந்தவர்
எல்லை வழக்கு
எதிர்கொண்டதனால்
இல்லையே ஆனூர்.

— சி. சதாசிவம்

# சோதிடம் கற்போம்

"ஞானி"

இதுவரை ஜாதகங்களில் 12 வீடுகளுக்குமுரிய பலாபலன்களைப் படித்தோம். இப்போது சில யோகங்களைப் பற்றிப் படிப்போம்.

## 1. பஞ்சமகா யோகங்கள்

செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி ஆகிய பஞ்சக் கிரகங்கள் ஆட்சி அல்லது உச்சம் பெற்றுக் கேந்திரத்திலிருப்பின் அவர்கள் முறையே பின்வரும் பெயர்களைப் பெற்று அவற்றிற்குரிய பலன்களைக் கொடுப்பர்.

1. ருசகயோகம் — சூரக்குணம், ஆயுள்விருத்தி, தனலாபம்.
2. பத்திரயோகம் — வித்துவான், அரசசன்மான முடையோன்.
3. ஹம்ஸயோகம் — சாது, சுகதேகி.
4. மாளவயோகம் — பலவான், களத்திர புத்திர பாக்கியமுடையோன்.
5. சசயோகம் — வேலையாள், சுகமுடையோன், பலவான், அதிகாரி, ஆனால் கெட்டநடையுடையோன்.

## 2. ஆசிரிய யோகம்

ஒரு பாவத்தில் சுபனிருக்க அல்லது அதைப் பார்க்க அப்பாவாதிபன் நட்பாட்சி உச்சமாகிய ஸ்தானபலம்பெற்று மூடஸ்தானமாகிய பெலவீன மின்றியிருப்பது ஆசிரியயோகமாகும். இவ்வாறே பன்னிரு பாவங்களுக்கும் பன்னிரு யோகமேற் படும். இலக்கினமாதியாய பன்னிரு பாவங்களுக்கு முரிய இப்பன்னிரு யோகங்களுக்கும் பலன்கள் பின்வருமாறு அமையும்.

1. தீர்க்காயுள் 2. சுகபோசனம் 3. கீர்த்தி
4. வாகனவிருத்தி 5. புத்திமான் 6. விவாதசீலன்
7. தாரசுகமுள்ளோன் 8. தரித்திரன் 9. பாக்கியசாலி
10. சர்வசனஇரட்சகன் 11. இலாபவான்
12. விரயசீலன்

## 3. அதியோகம்

இலக்கினத்திற்கு அல்லது சந்திரனுக்கு ஆறு, ஏழு, எட்டில பாபக்கிரகத் தொடர்பின்றிச் சுபக் கிரகங்கள் நிற்பது அதியோகமெனப்படும். இதன் பலன்; சேனுதிபத்தியம், மந்திரித்துவம், அரசசன் மானம், தீர்க்காயுள், ஐஸ்வரியம் என்பன.

## 4. மகாபாக்கிய யோகம்

சூரியன், சந்திரன், இலக்கினம் இவை ஒற்றைராசியில் இருக்கப் பகலிற் புருஷனுக செனித்தாலும், இவை இரட்டை ராசியில் நிற்க இரவில் ஸ்திரீயாகச் செனித்தாலும் மகாபாக்கிய யோகமுண்டாகும். இந்த யோகமுள்ளோர் பல துறைகளிலும் நற்பலனை அடையும் பாக்கியசாலி களாவர்.

## 5. கேசரி யோகம்

குருவிற்குக் கேந்திரத்திற் சந்திரனிருந்தாற் கேசரியோகமாகும். இதன் பலன் தீர்க்காயுசு, அதிககீர்த்தி, சாமர்த்திய புத்தி ஆகியனவாகும்.

## 6. வசுமத் யோகம்


இலக்கினத்திற்கு அல்லது சந்திரனுக்கு உப ஜெய ஸ்தானங்களில் எல்லாச் சுபக்கிரகங்களு மிருந்தால் வசுமத் யோகமாகும். தன் வீட்டில் எப்போதுமதிக திரவியத்தோடு கூடியிருத்தலே வசுமத்யோக பலனாகும்.

## 7. இலட்சுமி யோகம்

பாக்கியேசனும் சுக்கிரனும் சுய க்ஷேத்திரத் திலாவது உச்சத்திலாவது கேந்திர திரிகோணம் பெற்றிருந்தால் இலட்சுமியோகமாம். இலட்சுமி கடாட்சம், வாகன சுகம், இராச சன்மானம், கொடை ஆதியன இலட்சுமி யோகத்தின் பலன் களாகும்.

## 8. கிரகமாலிகா யோகம்

இலக்கினம் முதல் ஏழு இராசிகளில் இடை விடாமல் கிரகங்கள் இருந்தால் கிரகமாலிகா யோகமாகும். சனுதிகாரம், தருமச்செயல், நல் லறிவு, சுகானுபவம் என்பன இதன் பலன்களா கும். (வளரும்)




**இ. கந்தையா, கரம்பன், ஊர்காவற்றுறை.**

**16-11-86 முதல் 15-12-86 வரை**

பின்வரும் இராசிப்பலன்கள் இம்மாதக் கிரகசாரத்தை யொட்டியே தரப்பட்டிருக்கின்றன. ஒரு சாதகரின் பலன்கள் அவரின் நட்சத்திர உடுதசா நிர்ணயத்தை ஒட்டியே ஏறக்குறைய முக்கால் பங்கு அமையும். கிரகசார பலன் கால் பங்கு வீதமே கிட்டத்தட்ட ஒருவரைப் பாதிக்கும். இதை மனதில் வைத்து பின்வரும் பலன்களை வாசித்துப் பயன் பெறவும். இங்கு இராசி என்று குறிப்பிடுவது ஜனன காலத்தில் சந்திரன் இருந்த இராசியேயாகும்.



## மேடம்

அசுவினி, பரணி, கார்த்திகை 1-ம் கால்

இந்த இராசியில் பிறந்தவர்களுக்கு இந்த மாதம் சூரியபகவான் 8ல்(அட்டமத்தில்) ரஜஸ மூர்த்தியாகிச் சமபலத்துடன் சஞ்சாரம் செய்கின்றார். பொதுவாக இவர்களின் உடல்நலம் சீராக இருக்கும். குடும்பநலம் பாதிப்புறும். வருமானம் அதிகரிக்கும். விற்றல் வாங்கல் மூலமும் வருமானம் கூட வாய்ப்புக்கள் உண்டு. வீட்டில் மங்கள நிகழ்வுகளும் இடம்பெறும். சனிபகவானுடன் கூடிச் சூரியபகவான் சஞ்சாரம் செய்தலின் விபத்துக்கள், அவமிருத்துக்கள், அலைச்சல், மன அமைதியின்மை முதலான துர்ப்பலன்களும் நிகழஇடமுண்டு. எனினும் லாபத்தில் குருபகவானின் சுப சஞ்சாரம் எதனையும் சமாளித்துக்கொள்ள உதவும்.

குடும்பவருமானம் திருப்திதரும். குடும்பத்தில் சிறுசிறு பிணக்குகளும் ஏற்படும். கணவன் மனைவி உறவும் திருப்தியளிக்காது. குடும்ப சுகவீனங்கள் அடிக்கடி தொல்லை கொடுக்கும்.

வர்த்தகர்களுக்கு முதலீடுகளில் வருமானம் கூடும். புதுமுதலீடுகளும் செய்யலாம். பழைய நிலுவைகளும் கிடைக்கும். வங்கி- நிதி இருப்புக்களும் திருப்திதரும். வாடிக்கையாளரின் நல்லெண்ணமும் ஆதரவும் அதிகரிக்கும்.

உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளின் ஆதரவும் பாராட்டுக்களும் கிடைத்தாலும் வேலைப் பொறுப்புக்களும் அதிகரிக்கவே செய்யும். சிலருக்குப் பதவிமாற்றங்கள் கூடக்கிடைக்கும். உடன் உத்தியோகத்தர்களின் உதவிகள் ஆறுதல்தரும்.

விவசாயிகளுக்கு இந்தமாதமும் பயிரழிவும் உற்பத்தியைக்குறைக்கும். இயற்கை - செயற்கை ஏதுக்களால் விளைவும் குறைவுறும். கடன்பயமும் இவர்களுக்குக் கவலைதரும்.

தொழிலாளர் மத்தியில் பிணக்குகளும் அமைதியின்மையும் ஏற்படும். வேலைவாய்ப்புக்களும்


குறைவுறும். தொழில் ஒப்பந்தவேலைகளும் நட்டத்தையே தரும்.

மாணவர் கல்வியூக்கம், ஆக்கம் தரும். ஆசிரியர் - மாணவர் மத்தியில் நல்லிணக்கம் ஏற்படும்; சட்டத்துறை மாணவர்கள் சிறப்புச்சித்தியும் பெறுவர். பொதுவாக இவர்களின் கல்வித்தேர்ச்சி மனநிறைவு தரும்.

பெண்களுக்கு கடந்தகாலங்களிலும் பார்க்க ஓரளவு மனநிறைவு ஏற்படும். கன்னிப்பெண்களின் விவாகமுயற்சிகள் தடைதாமதங்களுக்கிடையிலும் கைகூடிவரும். வேலைக்குப்போகும் பெண்களுக்குப் போக்குவரவில் அவதானம் தேவை.

அதிஷ்டநாட்கள். நவ 16பகல், 19ப, 20, 21ப, 25, டிசெ 3 4, 5பக, 7, 8

துரதிஷ்டநாட்கள். நவ 26 9.ப, 27, 28ப டிசெ 1, 2, 9காலை, 10, 11மு.ப




கார்த்திகை 2,3,4 ரோகிணி, மிருகசீரிடம் 1,2-ம் கால்

இடபராசியில் ஜெனனமானவர்களுக்கு இந்த மாதம் சூரியபகவான் 7ல் லோகமூர்த்தியாகிப் பலக்குறைவுடன் சஞ்சாரம் செய்வது நன்மை தராது. மற்றும் பிரதான குரு- செவ்வாய்- சனி ஆகியவர்களின் கோசாரசஞ்சாரமும் சாதகமாக அமையவில்லை. பொதுவாக இவர்களின் உடல் நலம் பாதிப்படையும்; குடும்பசுகமும் திருப்தி தராது. எதிலும் எடுத்தமுயற்சிகளில் தடைதாமதங்கள் - வீண்செலவு - ஏமாற்றம் முதலான சம்பவங்கள் தொடரும். போக்குவரவுகளிலும் விபத்து அவமிருத்துக்கள் - வாகனச்சேதம் முதலானவையும் இடம்பெறலாம். அற்பசுகம் அற்பபொருள் வரவு - அகாலபோசனம் முதலானவையும் தொடரலாம். பக்திசிரத்தையுடன் இஷ்டதெய்வ வழிபாடுகளால் எதனையும் சமாளித்து விடலாம்.

குடும்பத்தின் வருமானம் குறைவுறும். எதிர் பாராத திடீர் நெருக்கடிகள் குடும்பத்தில் பலப் பல பிரச்சினைகளை உருவாக்கும். புத்திரர் உதவிகள் கிடையாது. குடும்பசுகவீனம் கவலைதரும். கடன்பழுவும் ஏறும்.

வர்த்தகர்களுக்கு முதலீடுகளால் வருமானம் குறைவுறும். மாதஆரம்பத்தில் புதன்சாதகமாக இருப்பதால் வர்த்தகம் சுமாராக இருக்கும். கூடிய வரை முதலீடுகளைத் தவிர்த்தல் நல்லது.

உத்தியோகத்தர்களுக்குச் சோதனையான காலம். பதவிஇறக்கம் அல்லது பதவிநீக்கம் கூடச் சிலருக்குக் கிடைக்கும். சக ஊழியர்களின் நல்லெண்ண உதவிகளும் குறைவுறும்.

விவசாயிகளுக்கு பயிர் உற்பத்திச்செலவுகள் அதிகரிக்கும். கூலியாட்களும் பிரச்சினைகள் தருவார்கள். விவசாயப் பண்ணைகளில் விளைவும் வீழ்ச்சியுறும். சந்தைவாய்ப்பும் திருப்திதராது.

தொழிலாளர் மத்தியில் வேலைவாய்ப்புக்கள் குறைவுறும். தொழிற்பிணக்குகளும் தொழிலாளர் பிணக்குகளும் இவர்களை அமைதியிழக்கச் செய்யும். கிடைக்கும் வேலைக்குரிய சம்பளமும் கிடையாது. தொழில் ஒப்பந்த வேலைகளாலும் லாபம் கிடையாது.

மாணவர்கட்கு கல்வியூக்கம் வளரும். ஆனால் கல்வி அதிகாரிகளின் கெடுபிடிகள் கல்வி வளர்ச்சிக்குத் தடையாகவும் அமையும். ஆசிரிய மாணவர் ஒத்துழைப்பும் குன்றும். பரீட்சை முடிவுகள் மனநிறைவைத் தரமாட்டா.

பெண்களுக்கு இம்மாதமும் பிரச்சினைகளையே கொடுக்கும். கன்னிப்பெண்களின் காதல் விஷயங்களில் நிதானமும் முன்னெச்சரிக்கையும் தேவை: விவாகமுயற்சிகளும் அலைச்சல் ஏமாற்றங்களைத் தழுவினாலும் ஆச்சரியமில்லை.

அதிஷ்ட நாட்கள்: நவ. 17, 18, 22, 23, 27, 28, டிச. 5, 6, 9, 10, 14, 15.

துரதிஷ்ட நாட்கள்: நவ. 16, 29, 30 டிச. 3, 4, 12, 13.




மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.

இந்த இராசியில் பிறந்தவர்களுக்கு இந்த மாதம் சூரிய பகவான் 6ல் தாம்ர மூர்த்தியாகிப் பலக் குறைவுடன் சஞ்சாரம் செய்கின்றார்: மூர்த்தி பலம் குறைந்தாலும் கோசார பலம் பெறுவது சற்று ஆறுதல் தரும். பொதுவாக இவர்களின் உடல்நலம் சீராக இருக்கும்: குடும்ப நலம் குறைவுறும். எந்த முயற்சியும்

விண் செலவும், அலைச்சலும், தடைதாமதங்களின் மேல் கைகூடும். பெரியவர்கள் உதவி ஒத்தாசைகள் கிடைக்கும். வீட்டில் சந்தோஷ கொண்டாட்டங்கள் கூட இடம்பெறும். அந்நிய தேச சஞ்சாரம், விபத்து—அவமிருத்துப் பயம் முதலானவையும் நிகழலாம். குருவின் சுப கேசார சஞ்சாரம் நிகழுதலின் எதையும் வெற்றிகரமாகச் சமாளித்துக் கொள்ளுவார்கள்.

குடும்பத்தில் கணவன் மனைவி உறவு சீராக இருக்காது. குடும்பச் செலவுகள் அதிகரிக்கும். குரு முதலிய பெரியவர்களின் உதவிகளும் புத்திரர் உதவிகளும் இவர்களுக்கு ஆறுதல் தரும்.

வர்த்தகர்களுக்குப் பழைய முதலீடுகளின் வருமானம் வீழ்ச்சியுறும். வாடிக்கையாளரின் வரவும் குறையும். வங்கி—நிதி இருப்புக்கள் திருப்தியளித்தாலும் புது முதலீடுகளைத் தவிர்த்தல் நல்லது.

உத்தியோகத்தர்கட்கு மேலதிகாரிகளின் கெடுபிடிகள் அதிகரிக்கும். பதவிப் பொறுப்பும் வேலைப் பழுவும் கூடும். சிலருக்கு பதவிமாற்றம் கூடக் கிடைக்கும்.

விவசாயிகளுக்குப் பயிருற்பத்திச் செலவுகள் கூடும். இயற்கை செயற்கை ஏதுக்களால் பயிர் அழிவும் ஏற்படும். விவசாயப் பண்ணைகளிலும் உற்பத்தி விளைச்சல்கள் எதிர்பார்த்த அளவு கிடையாது.

தொழிலாளர் வேலைவாய்ப்புப் பெற்றாலும் உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைக்குமா என்பது கேள்வி? தொழில் ஒப்பந்த வேலைகள் லாபம் குறைந்தாலும் நட்டம் வரமாட்டாது.

மாணவர்களின் கல்வி முன்னேற்றம் தொடரும். ஆசிரிய மாணவர் நல்லெண்ணம் வளரும். கலைத்துறை கணிதத்துறை மாணவர்கட்கு சிறப்புக் கல்வித் தேர்ச்சி கிடைக்கும்.

பெண்களுக்கு கடந்த காலங்களிலும் இந்த மாதம் சற்றுச் சிரமங்கள் ஏற்பட இடமுண்டு. கன்னிப் பெண்களின் விவாக முயற்சிகள் பெரும்பாலும் கைகூடும். வேலைக்குப் போகும் பெண்களுக்கும் அதிகாரிகள் துன்பம் கொடுப்பர்.

அதிஷ்ட நாட்கள்: நவ. 20,21,24,25,29,30;
டிச. 7,8,11,12,13.

துரதிஷ்ட நாட்கள்: நவ. 16,17,18,19.
டிச. 1,2,5,6,14,15.



# கடகம்

**புனர்பூசம் 4-ம் கால், பூசம், ஆயிலியம்**

கடகராசியில் பிறந்தவர்களுக்கு இம்மாதம் சூரியபகவான் 5ல் சுவர்ணமூர்த்தியாகி மூர்த்தி பலம் பெற்றுவருவது நன்மையாகும். தேகசுகம் சீராக இருக்கும். செவ்வாய் 7ல் சஞ்சாரம் செய்வதால் குடும்பசுகம் பாதிப்புற நேரும். முன்பு தடை தாமதங்களுக்குள்ளாகி இருந்த காரியங்களிலும் சித்திபெறுவர். இராசாங்க உதவிகள் கிடைக்கும். சிலருக்கு நிரந்தர உத்தியோக வாய்ப்புக்களும் கிடைக்கும். இனபந்துக்களின் பகை விரோதங்களும் தொடரும். புத்திரர் வழியால் செலவுகளும் கவலைகளும் ஏற்படும். வீட்டில் மங்கல காரியங்கள் நிகழ வாய்ப்புகள் பெரும்பாலும் குறைவாகவே ஏற்படும்.

குடும்பத்தின் வருமானத்திலும் செலவுகள் அதிகரிக்கும், குடும்பத்தில் பிணக்குகள் பிரிவினைகளும் ஏற்படும். கணவன் மனைவி உறவும் சீர்கெடும். குடும்பத்தில் எதிர்பாராத திடீர்நெருக்கடிகளும் ஏற்படும்.

வர்த்தகர்களுக்கு இம்மாதம் வியாபாரமந்த நிலைய தொடரும். பழைய நிலுவைகளும் கைக்கு வந்து சேரும். உடன் பங்காளிகள் அல்லது ஊழியர்களுடன் கருத்துவேற்றுமைகளும் ஏற்படும்.

உத்தியோகத்தர்கட்கு மேலதிகாரிகளின் மேலதிகாரிகளின் பாராட்டுக்கள் கிடைக்கும். சிலருக்குப் பதவி உயர்வு அல்லது பதவி உறுதிப்படுத்துதல்களும் கிடைக்கும். ஆனால் பதவிப் பொறுப்பும் வேலைப்பழுவும் அதிகரிக்கவே செய்யும்.

விவசாயிகளுக்குப் பயிரழிவும் உற்பத்திச் செலவு அதிகரிப்பும் ஏற்படும். எனினும் சுமாரான உற்பத்தி விளைவுகள் கிடைக்கும். சந்தை வாய்ப்பும் கிடைக்கும்.

தொழிலாளர் வசதிகளை கணிசமான அளவில் பெறுவர். தொழில் ஒப்பந்த வேலைகளும் லாபம் தரும். எனினும் விபத்து அவமிருத்து பயம் இவர்களைத் தொடரவே செய்யும்.

மாணவர் கல்வித்தடைக் காரணிகள் அதிகரிக்கும். ஆசிரியர் மாணவர் கருத்துவேறுபாடு

கள் வலுவடையும். கல்விமுன்னேற்றம் பெரிதும் தடைப்படும். பரீட்சைமுடிவும் திருப்தியளிக்கா.

பெண்களுக்கு விவாகமுயற்சிகள் பெரும்பாலும் தோல்விகளைத் தழுவினாலும் ஆச்சரியமில்லை. குடும்பப் பிணக்குகள் குடும்பப் பெண்களுக்கு மனவேதனைகளைக் கொடுக்கும்.

அதிஷ்ட நாட்கள்: நவ. 17,18,22,23,27,28;
டிச. 1,2,9,10,13,14,15.

துரதிஷ்ட நாட்கள்: நவ. 19,20,21.
டிச. 3,4,5,7,8.



## சிங்கம்

மகம், பூரம், உத்தரம் 1-ம் கால்

சிங்கராசியில் பிறந்தவர்களுக்கு இம்மாதம் சூரியபகவான் 4ல் ரஜதமூர்த்தியாகி நல்ல பலத்துடன் வலம்வருவது நன்மையாகும். பொதுவாக இவர்களின் உடல்நலம் சீராக இருக்கும். கடந்த காலங்களிலும் பார்க்க இம்மாதம் இவர்களுக்குச் சற்று ஆறுதல் கிடைக்கும். குருபகவானின் கேந்திரபலத்துடன் கூடிய திருஷ்டி இருப்பது நன்மையாகும். ஆனல் நல்மனதும் விவேகமுடைய பெரியவர்களின் துணையும் ஆலோசனைகளும் இவர்களுக்கு ஆக்கம் தரும். பொதுவாக இவர்களின் வருமானம் திருப்தியாய் இருக்கும். முன்தடைப்பட்டிருந்த காரியங்களில் சித்தியும் பெறுவர். இனசனங்களால் ஆபத்துக்கள் அவமானங்கள் பொருள் நட்டங்களும் இடம்பெற்றாலும் ஆச்சரியமில்லை.

குடும்பத்தில் கணவன் மனைவி உறவு சீராக இருக்கும். குடும்ப வருமானம் திருப்திதரும். குடும்ப பெரியவர்களின் உதவிகளும் கிடைக்கும். புத்திரர் உதவிகளும் கிடைக்கும்.

வர்த்தகர்கட்கு வியாபார மந்தநிலை தொடரும். பழைய முதலீடுகளின் வருமானம் இந்த மாதமும் குறையவே செய்யும். புதிய முதலீடுகளைத் தவிர்த்தல் நல்லது. கறுப்புச்சந்தை வியாபாரம் ஆபத்துக்களில் முடியும்.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் பாராட்டுக்கள் கிடைக்கும். சிலருக்கு வசதியான இடமாற்றங்களும் கிடைக்கும். சகஉத்தியோகத்தரின் ஒத்துழைப்புக்களும் கிடைக்கும்.

விவசாயிகளுக்கு பயிரழிவுகள் தொடரும். உற்பத்திச் செலவு அதிகரிப்பால் வருமானம் குன்றும். விவசாயப் பண்ணைகளிலும் வருமானம் குன்றும். கூலியாட்களின் உதவிகள் கிடைக்கும்.

தொழிலாளர் ஓரளவு வேலைவசதிகள் பெறுவர். தொழில் பிணக்குகள் குறையும். தினச்சம்பள வேலை செய்வோருக்கும் சீவன வசதி கிடைக்கும். தொழில் ஒப்பந்த வேலைகளாலும் லாபம் குறைந்தாலும் நட்டம் வராது.

மாணவர் கல்வி முன்னேற்றம் வளர்ச்சியடையும். ஆசிரியர் மாணவர் ஒத்துழைப்பு ஓரளவு உண்டு. பொதுவாக கல்வித்தேர்ச்சி மனநிறைவு தரும்.

பெண்களுக்கு மனநிறைவுகள் கிடைக்கும். சிலருக்கு விவாகசித்தியும் ஏற்படும். குடும்பப் பெண்களுக்குக் கணவன்மாரின் அன்பும் அரவணைப்பும் ஆறுதல் தரும். குடும்பத்தில் எதிர்பாராத செலவுகளும் ஏற்படவே செய்யும்.

அதிஷ்ட நாட்கள்: நவ. 16,19,20,21,29,30.
டிச. 3,4,5,12,13.

துரதிஷ்ட நாட்கள்: நவ. 22,23,24.
டிச. 6,9,10,11.



## கன்னி

உத்தரம் 2,3,4, அத்தம், சித்திரை 1,2,

கன்னிராசியில் பிறந்தவர்களுக்கு இம்மாதம் சூரியபகவான் 3ல் லோகமூர்த்தியாகி வலம் வருகின்றார். சூரியன் மூர்த்திபலம் குறைவதுடன் சனி சேர்க்கைபெறுவதும் நன்மைதராது. சூரியன் கோசாரபலன் பெறுதலின் அதிகம் பாதிப்புக்கள் ஏற்பட இடமில்லை. பொதுவாக இவர்களின் உடல்நலம் ஓரளவு பாதிப்படையவே செய்யும். வருமானமும் குறைவுறும். செலவுகள் அதிகரிக்கும். இனசனபந்துக்களுடன் பகை விரோதங்களும் ஏற்படும். இவர்கள் வாழ்க்கையில் நினைப்பது ஒன்று நடப்பது ஒன்ருக நிகழும். சிலருக்கு அந்நியர் உதவி அந்நியதேச சஞ்சாரம் முதலியனவும் கிடைக்கும். புதன் சுக்கிரன் இவர்கள் பலம்பெறுவதால் எதையும் வெற்றிகரமாகச் சமாளித்துக்கொள்ளுவார்கள்.

குடும்பத்தில் பிரச்சினைகள் அவ்வப்போது தோன்றி மறையும். கணவன் மனைவி உறவுகளும் திருப்திதராது. குடும்ப வருமானமும் குறையும். குடும்பச் செலவுகள் கூடும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் முன்னேற்றம் காணும். ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகர்கள் லாபம் பெறுவர். ஆனால் புது முதலீடுகளைத் தவிர்த்தல் நல்லது. வங்கி நிதி இருப்புக்களும் குறைவுறும்.

உத்தியோகத்தர்கட்கு மேலதிகாரிகளின் கெடுபிடிகள் அதிகரிக்கும். வேலைப்பொறுப்புக்களும் கூடும். உடன் உத்தியோகத்தர்களின் உதவிகளும் கிடையாது.

விவசாயிகட்கு இம்மாதம் இயற்கை செயற்கையேதுக்களால் பயிரழிவு ஏற்படும். கூலியாட்களின் உதவிகளும் கிடைக்கும். பண்ணை விவசாயிகளுக்கு பயிர்விளைவும் கூடும்.

தொழிலாளர் வேலைவாய்ப்புப் பெறுவர். தொழில் பிணக்குகளும் சமாதானமாகத் தீரும். தினக்கூலி வேலைசெய்வோருக்கும் சீவியக்கஷ்டம் குறைவுறும். தொழில் ஒப்பந்த வேலைகளில் முன்னேற்றம் பெறுவர்.

மாணவர் கல்விமுன்னேற்றம் காணும். கலைத்துறை கணிதத்துறை மாணவர்கட்கு விசேட முன்னேற்றம் ஏற்படும். வெளிநாட்டுக் கல்வி வாய்ப்பு புலமைப் பரிசில்களும் கிடைக்கும்.

பெண்களுக்கு மனஉழைச்சலும் அலைச்சலும் அதிகரிக்கும். விவாகாதி முயற்சிகள் ஏமாற்றங்களையும் தரும். குடும்பச்செலவுகள் வீட்டு அமைதியைக் குலைக்கும்.

அதிஷ்ட நாட்கள்: நவ. 17,18,21,22,23,27,28,
டிச. 1,2,5,6,14,15.

துரதிஷ்ட நாட்கள்: நவ. 16,24,25;
டிச. 7,8,12,13.



## துலாம்

சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1, 2, 3

இந்த இராசியில் பிறந்தவர்களுக்கு இந்த மாதம் சூரியபகவான் 2ல் தாம்ரமூர்த்தியாகி வலம் வருகிறார். சூரியன் மூர்த்திபலம் தானபலம் இரண்டும் குறைவது நன்மைதராது. பொதுவாக இவர்களின் உடல்நலம் அடிக்கடி பாதிக்கப்படலாம். குடும்பசுகமும் குன்றும். வருமானத்திலும் செலவுகள் அதிகரிக்கும். காரியநட்டம் அலைச்சல் வாகனச்சேதம் - விபத்து குடும்பப்பிரிவு அந்நிய தேசசஞ்சாரம் மன அமைதிக்குறைவு முதலான பலன்களே அதிகம் நிகழும். குருபகவான் 5ல் சுப கோசார சஞ்சாரத்தில் பலம்பெறுவதால் எதையும் சமாளித்துக் கொள்ளுவார்கள், அலைச்சல் மூலம் காரியசித்தி, பெரியோர்உதவி புத்திரர் உதவி, வீட்டில் சந்தோஷ கொண்டாட்டங்கள் முதலியனவும் நிகழும்.

குடும்பத்தில் அவ்வப்போது சிறுசிறு பிணக்குகள் தோன்றிமறையும். குடும்ப வருமானம் திருப்திதரும். எதிர்பாராத திடீர்ச்செலவுகளும் ஏற்படும். வீட்டில் அல்லது நெருங்கிய இனபந்துக்களுக்குள் சுபகொண்டாட்டங்களும் நிகழும்.

வர்த்தகர்களுக்கு பழைய முதலீடுகளில் வருமானம் சராசரியாக இருக்கும். ஆடம்பர அழகு சாதனப்பொருள் வியாபாரிகளுக்கு முன்னேற்றம் உண்டு. வாடிக்கையாளரின் நல்வரவும் உண்டு.

உத்தியோகத்தர்களுக்கு பொறுப்புக்களைச் சரியாக - திறமையாக வகிக்கமுடியாத நிர்ப்பந்தங்கள் ஏற்படும். சகஉத்தியோகத்தர்களின் உதவிகள் கிடைக்கும். பொதுமக்களின் உறவு குன்றும்.

விவசாயிகளுக்குப் பயிர்ச்சேதம் அடிக்கடி ஏற்படும். பசளை - மானியம் முதலியன கிடைத்தாலும் கூலியாட்கள் பிரச்சினைகளும் ஏற்படும். விவசாயப் பண்ணைகளில் எதிர்பார்த்த விளைவு தராது.

தொழிலாளர் வேலைவசதிகள் பெரும்பாலும் குறையும். தொழில்பிணக்குகளும் தொடரவே செய்யும். தொழில் ஒப்பந்த வேலைகளிலும் லாபம் குறைந்தாலும் நட்டம் ஏற்பட இடமில்லை.

மாணவர் கல்வித்தடைக்கேற்ற காரணிகள் தொடர்ந்தாலும் சுயமுயற்சியால் கல்வித்தேர்ச்சி பெறுவர். மருத்துவம் - இயந்திரப்பொறியியல் துறை மாணவர் சிறப்புச்சித்தியும் பெறுவர்.

பெண்களுக்கு பெரும்பாலும் எண்ணங்கள் கைகூடிவரும். ஆனால் வாக்குவிரோத சம்பவங்களும் ஏற்படவேசெய்யும். வீட்டில் சுபசந்தோஷ கொண்டாட்டங்களும் நிகழவாய்ப்புண்டு.

அதிஷ்டநாட்கள்: நவ 19ப,20,21ப,24ப,25,29
டிச 3,4,5ப,7,8

துரதிஷ்ட நாட்கள்: நவ. 16,17,18,27,28.
டிச. 9,10,13,14,15.



## விருச்சிகம்

விசாகம் 4, அனுஷம், கேட்டை

இவ்விராசியில் பிறந்தவர்கட்கு இந்த மாதம் சூரியபகவான் ஜென்மத்தில் ரஜதமூர்த்தியாகிச் சமபலத்துடன் சஞ்சாரம் செய்தலின நன்மை கலந்த தியபலன்கள் நிகழும். உடல்நலக்குறைவு அடிக்கடி ஏற்படும். வருமானங்கள் எதிர்பார்த்த படி முன்னேற்றமடையாது. எந்த முயற்சியும் வீண் விரையத்துடன் கூடிய அலைச்சல் மூலமே சித்திபெறும். அந்நியதேச சஞ்சாரம் அந்நியநாட்டுப் பிரயாணம் அந்நிய மக்களால் அல்லற்படுத்தப் படல் முதலான பலன்கள் நிகழும். செவ்வாய் சுப சஞ்சாரம் செய்தலின் பூமிலாபம் இயந்திர கருவிகள் மூலம் லாபம் முதலானவை யும் சிலருக்குக் கிடைக்கும். ஏழரைச் சனீஸ்வர னின் காலமாதலின் சனிப்பிரீதி செய்வதால் ஆறுதல் கிடைக்கும்.

குடும்பத்தில் உட்பூசல்கள்-பிணக்குகள் இடம் பெறும். குடும்ப வருமானத்திலும் செலவுகள் அதிகரிக்கும். புத்திரர் தொல்லை தருவர். கணவர் மனைவி உறவும் சீராக இராது.

வர்த்தகர்களுக்கு பழைய முதலீடுகளில் வருமானம் வீழ்ச்சியடையும், வங்கி-நிதி இருப்புக்களும் குறைவுறும். வாடிக்கையாளரின் வருகையும் குன்றும். புது முதலீடுகளைத் தவிர்த்தல் நல்லது.

உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளுக் கூடினும் மேலதிகாரிகளின் ஒத்துழைப்புக் கிடைக்கும். சக உத்தியோகத்தருடன் கருத்து மாறுபாடுகளும் ஏற்படலாம்.

விவசாயிகளுக்குப் பயிர்விளைவு குன்றும். பயிரழிவு தொடரும். பண்ணை விவசாயிகளுக்கும் பயிர் விளைச்சல் குறையும். கூலியாட்கள் பிரச்சினைகளும் ஏற்படும்.

தொழிலாளர் பிணக்குகள் அடிக்கடி ஏற்படும். வேலைநிறுத்தம் முதலியனவற்றால் இவர்களின் வருமானம் வீழ்ச்சியுறும். தொழில் ஒப்பந்த வேலைகளிலும் செலவுகள் அதிகரிக்கும்.

மாணவர் கல்வியூக்கம் தடைப்படும். மாணவர் மத்தியில் ஏமாற்றம் விரக்தி மனப்பான்மை பிரதிபலிக்கும். பரீட்சை முடிவுகளும் திருப்தி தராது.

பெண்கள் மன எண்ணங்கள் சிரமங்களுக்கு மத்தியில் நிறைவேறும். விவாகப் பிரச்சனைகளும் அலைச்சல் மூலம் பலன் கிடைக்கும். குடும்பப் பெண்களுக்கு குடும்பத்தில் எதிர்பாராத அநாவசியச் செலவுகள் ஏற்படும்.

அதிஷ்டநாட்கள்: நவ. 22,23,27,28பகல்
டிசெ. 1,2,5இரவு.6 9காலை.10

துரதிஷ்டநாட்கள்: நவ. 16பகல்,19பகல்.20,21
டிசெ. 11பி.ப.12,13பக



## தனுசு

மூலம், பூராடம், உத்தராடம் 1-ம் கால்

தனுசு இராசியில் ஜெனனமானவர்களுக்குச் சூரியபகவான் 12ல் சுவர்ணமூர்த்தியாகி மூர்த்தி பலத்துடன் சஞ்சாரம் செய்வது நன்மையாகும். பொதுவாக இவர்களுக்கு இந்தமாதம் கடந்த மாதங்களில் நிகழ்ந்த கஷ்டநஷ்டங்களில இருந்து சற்றுவிடுதலை கிடைக்கும், தேகசுகம் குடும்பசுகம் என்பன சீராகஇருக்கும், பொருள் வருமானமும் கூடும். ஆனால் சூரியன் விரையத்தில் சஞ்சாரம் செய்வதாலும் குரு மற்றும் சனிமுதலியோரின் துர்க்கோசார சஞ்சாரம் நிகழ்வதாலும் சுபபலன்கள் அதிகம் தடைப்படவே செய்யும். எதிர்பாராத திடீர்நெருக்கடிகள்- தவிர்க்கமுடியாத அநாவசியச் செலவுகள் இனபந்துக்களுடன் பகைவிரோதம் முதலானவையும் - புத்திரர்துன்பம் - பொருட்சேதம் முதலானவையும் நிகழலாம்.

குடும்பத்தவர்களுக்குக் கணவன்மனைவி உறவு சீராகஇருக்கும். புத்திரர் உதவிகள் கிடையாது. குடும்பத்தில் வருமானம் திருப்தியளித்தாலும் தவிர்க்கமுடியாத திடீர்செலவுகளும் ஏற்படும்.

வர்த்தகர்களுக்கு கடந்தகாலங்களிலும் பார்க்க வியாபாரம் முன்னேற்றம்காணும். நிதி இருப்பு பற்றுக்குறையாகவே இருக்கும். முதலீடுகளில் லாபம் குன்றும்.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் பாராட்டுக்கள் கிடைக்கும். சிலருக்குப் பதவிச் சிறப்பும் கிடைக்கும். ஆனால் பதவிக்கேற்ற அநாவசியச்செலவுகளால் கடன்பயமும் ஏற்படும்.

விவசாயிகளுக்கு பயிர்விளைச்சல் குறையும். இயற்கை- செயற்கை ஏதுக்களால் பயிர்ச்சேதமும் ஏற்படும். விவசாயப்பண்ணைகளிலும் உற்பத்திச் செலவு அதிகரிப்பால் வருமானம் குன்றும்.

தொழிலாளர் வேலைவாய்ப்புக்கள் (இடைக்கிடை) பெறுவர். தினச்சம்பள வேலையாட்களுக்கும் சீவியத்துக்கு வேலைகிடைக்கும். தொழில்ஒப்பந்த வேலைகளிலும் நட்டம் வராது.

மாணவர் கல்விக்குழப்பநிலை தொடரும்; மாணவர்மத்தியில் ஏமாற்றமும் - விரக்தியும் தோன்றினாலும் சுயமுயற்சியால் கல்வித்தேர்ச்சியடைவர். வெளிநாட்டுக் கல்வியும் கிடைக்கும்.

பெண்களுக்கு விவாகாதிமுயற்சிகள் பெரும்பாலும் தோல்வியையும் தரும். கணவன்மாரின் அன்புகிடைத்தாலும் குடும்பப்பொறுப்பும் வீண் செலவுகளும் இவர்களுக்குத் தொல்லைதரும். •

அதிஷ்டநாட்கள்: நவ 16ப,24ப,25,29,30
டிசெ 3,4,5ப,7,8,12,13பகல்

துரதிஷ்டநாட்கள்: நவ 16மா,17,18,21இ,22,23
டிசெ 1,2,13இ,14,15




உத்தராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2

மகர இராசியில் செனனமானவர்களுக்கு இந்தமாதம் சூரியபகவான் 11ல் லோகமூர்த்தியாகி வலம்வருகின்றார். இவர் கோசாரசஞ்சார வலிமைபெற்றாலும் மூர்த்திபலம் குறைவதுபெரும்பாலும் அனுகூலங்களுடன் பிரதிகூலங்களும் இடம்பெறவே செய்யும். பொதுவாக இவர்களின் தேகாரோக்கியம் சீராக இருக்கும். வருமானமும் கணிசமானஅளவு வளர்ச்சியடையும். இனசனபந்துக்களின் கொண்டாட்டங்களும் நிகழும்; பெரியவர்களின் உதவிகள் - குரு முதலியபெரியவர்களின் தரிசனம் வீட்டில் சந்தோஷ கொண்டாட்டங்கள் கூட நடைபெறும். சிலருக்கு அந்நியர்உதவி அந்நியதேசப் பொருள்வரவு, விற்றல் வாங்கல் லாபங்களும் கிடைக்கும்.

குடும்பத்தில் கணவன்மனைவி உறவு சீராக இருக்கும். மனநிறைவான சுபகொண்டாட்டங்கள் முதலான சந்தோஷநிகழ்ச்சிகள் நிகழும். புத்திரர் உதவிகள் கிடைக்கும்.

வர்த்தகர்களுக்கு முதலீடுகளில் வருமானம் அதிகரிக்கும். ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகம் குறிப்பிடக் கூடிய அளவு முன்னேற்றமடையும். எனினும் ஊழியர் சம்பந்தமாக எச்சரிக்கையும் தேவை.

உத்தியோகத்தர்கட்கு மேலதிகாரிகள் அடிக்கடி கஷ்டமான பணிப்புரைகளைப் பிறப்பிப்பார்கள். வேலைத்தலம் இவர்களுக்கு மனநோயைக் கூட ஏற்படுத்தினாலும் ஆச்சரியமில்லை. உடன் உத்தியோகத்தரின் ஒத்தாசைகள் ஆறுதலளிக்கும்.

விவசாயிகட்கு பயிர்விளைவு மனநிறைவைத் தரும். கூலியாட்களும் மனப்பூர்வமாக வேலைசெய்வர். விளைவுகளுக்கு நல்ல லாபகரமான சந்தை வாய்ப்பும் கிடைக்கும். வாழ்க்கைத்தரமுமுயரும்.

தொழிலாளர் மனநிறைவு பெறுவர். வேலை வசதிகள் கிடைக்கும். தொழிலாளர் மத்தியில் பிணக்குகள் நீங்கி ஒற்றுமை வலுவடையும். தொழில் ஒப்பந்த வேலைகளும் நிறைவேறும்.

மாணவர் கல்விவளர்ச்சி பெறுவர். சட்டத்துறை கணிதத்துறை மாணவர்கள் சிறப்புச் சித்தியும் பெறுவர். சிலருக்குப் புலமைப் பரிசில்கள் அல்லது வெளிநாட்டில் கல்விதொடரும் வசதியும் கிடைக்கும்;

பெண்களுக்கு எண்ணங்கள் மனம்போல் நிறைவேறும். விவாக முயற்சிகளும் சாதகமாக நிறைவேறும். குடும்பப் பெண்களுக்கு கணவன்மாரின் அன்பும் ஆதரவும் கிடைக்கும்.

அதிஷ்ட நாட்கள்: நவ. 17,18,19,27,28.
டிச. 1,2,6,10,11,14,15.

துரதிஷ் நாட்கள்: நவ. 20,21,24,25.
டிச. 3,4,5.




அவிட்டம் 3,4 சதயம், பூரட்டாதி 1,2,3-ம் கால்

இந்தராசியில் செனனமானவர்களுக்கு இந்த மாதம் சூரியபகவான் 10ல் சுவர்ணமூர்த்தியாகி பலத்துடன் சஞ்சாரம் செய்வது நன்மையாகும். கடந்த காலங்களிலும் பார்க்க இந்தமாதம் இவர்களுக்கு மனநிறைவான சம்பவங்கள் தொடங்கும். உடல் நலம் சீராக இருக்கும். பொருள் வருமா

னமும் குறிப்பிடக் கூடியளவு முன்னேறும். எடுத்த முயற்சிகள் சுமுகமாக நிறைபெறும்: அந்நியர் உதவி–அந்நியநாட்டுப் பொருள்வரவு-விற்றல் வாங்கல் மூலம் லாபம் முதலானவையும் கிடைக்கும்: சிலருக்கு வெளிநாட்டு பிரயாண வாய்ப்புகளும் கிடைக்கும்.

குடும்பத்தின் வருமானம் திருப்தி தரும். கணவன் மனைவி நல்லுறவு வளரும். அந்நியர் உதவி அந்நிய நாட்டுப் பொருள்வரவும் கிடைக்கும்; புத்திரர் உதவிகள் கேள்விக்குறியில் இருக்கும்,

வர்த்தகர்களுக்கு மாத ஆரம்பத்தில் மந்த நிலையில் இருந்த வியாபாரம் மாதக் கடைசியில் சுறுசுறுப்புடன் முன்னேறும். ஏற்றுமதி இறக்குமதி வியாபாரிகள் நல்ல லாபம் பெறுவர்.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் பாராட்டுகள் கிடைக்கும். சிலருக்குப் பதவி உயர்ச்சி முதலியனவும் கிடைக்கும்.

விவசாயிகளுக்குப் பயிர் அழிவுகள் ஏற்பட்டாலும் சாதாரணமாக நல்ல விளைவுகள் கிடைக்கும். விவசாயப் பண்ணைகளில் வருமானம் குறைந்தாலும் நட்டம் ஏற்படாது.

தொழிலாளர் சீவியத்துக்குக் கஷ்டமில்லாமல் வேலைவசதிகள் கிடைக்கும். ஒப்பந்தத் தொழில்களிலும் லாபம் கிடைக்கும்.

மாணவர் கல்விக்குழப்பநிலை தொடரும்: ஆசிரியர்–மாணவர் கருத்து மோதல்கள் கூட இடம் பெறலாம். மாணவர் மத்தியில் ஏமாற்றம் தலை தூக்கி நிற்கும். பரீட்சை முடிவுகளும் திருப்திதரா.

பெண்களுக்கு கடந்த காலங்களிலும் பார்க்க சற்று ஆறுதல் கிடைக்கும். கணவன் மாருடன் அடிக்கடி கருத்து மாறுபாடுகள் குடும்பப் பெண்களுக்கு ஏற்படும்.

அதிஷ்டநாட்கள்: நவ. 16பக.19பக.20, 21பகல்.
டிசெ. 3,4,5பக.7,8,12

துரதிஷ்டநாட்கள்: நவ. 21இரவு. 22,23,27, 28ப.
டிசெ. 5இரவு.6




பூரட்டாதி 4-ம் கால், உத்தரட்டாதி, ரேவதி.

இந்தராசியில் பிறந்தவர்களுக்குச் சூரிய பகவான் 9ல் தாம்ர மூர்த்தியாகி பலக் குறைவுடன் இந்தமாதம் வலம் வருகிருர்: சூரியன் சனி சேர்க்கையும் நல்லதல்ல. பொதுவாக இவர்களின் உடல்நலம் அடிக்கடி ஞன்றும். குடும்ப சுகமும் பாதிக்கப்படும். பொருள் வருமானம் குறைவுறும். எதிர்பாராத திடீர் நெருக்கடிகள் செலவினங்களும் ஏற்படும். எடுத்த முயற்சிகளில் தடைதாமதம் அலேச்சல் ஏமாற்றம் ஏற்படும். சிலருக்கு அந்நியதேச சஞ்சாரம் மறைந்து ஒழிந்து வாழ வேண்டிய சந்தர்ப்பங்களும் ஏற்படும். செவ்வாயின் சுப சஞ்சாரம் ஓரளவு ஆறுதல் கொடுக்கும். பூமிலாபம்-இயந்திரப் பொறிகளால் லாபம் என்பன கிடைக்கும். தசாபுத்தி அந்தர பெலம் உள்ளவர்கள் அதிகம் பாதிக்கப்படமாட்டார்கள்.

குடும்பத்தவர்களின் வருமானம் திருப்தி தரும். கணவன் மனைவி உறவும் சீராக இருக்கும்; பெரியவர்களின் விரோதங்களும் ஏற்படும்.

வர்தகர்களுக்கு வியாபார மந்தநிலை ஏற்படும். வாடிக்கையாளரின் வரவும் குன்றும். பழைய முதலீடுகளிலும் வருமானம் குறைவுறும். வங்கி-நிதி இருப்புக்களும் திருப்திதராது.

உத்தியோகத்தர்களுக்குத் தரும சங்கடமான நிலையில் கடமை செய்ய வேண்டி இருக்கும் புதுப்புதுக் கெடுபிடிச் சட்டதிட்டங்களை அமுல் நடத்த முடியாத திண்டாட்டத்தால் அதிகாரிகளின் கோபத்துக்குள்ளாகவேண்டியும் வரும்.

விவசாயிகளுக்கு பெரும்பாலும் விளைவு குறையும். இயற்கை செயற்கை ஏதுக்களால் பயிர் அழிவும் ஏற்படும். விவசாயப் பண்ணைகளிலும் நட்டம் ஏற்படும்;

தொழிலாளர் மத்தியில் அமைதிக் குறைவு ஏற்படும். வேலை வசதிகளும் குறையும். தொழில் பிணக்குகள் வளரும். தொழில் ஒப்பந்த வேலைகளும் உரியகாலத்தில் செய்து முடிக்காமையால் நட்டம் தரும்.

மாணவர் கல்வி முன்னேற்றம் பெரிதும் தடைப்படும். கல்வி அதிகாரிகள் கொடுக்கும் நெருக்கடிகளால் மாணவர் மத்தியில் வெறுப்பும் ஏமாற்றமும், வளரும்.

பெண்களுக்கு பலப்பல சிக்கல்கள் அவ்வப்போது தோன்றி மறையும். கன்னிப் பெண்களின் விவாக முயற்சிகளும் ஏமாற்றம் தரும். குடும்பத்தில் திடீர் நெருக்கடிகளும் ஏற்படும்.

அதிஷ்டநாட்கள்: நவ. 16மாலை.17,18,22,23
டிசெ. 1,2,5இரவு, 6,13இரவு14.

துரதிஷ்டநாட்கள்: நவ. 24பக.25,29,30
டிசெ. 7,8,9 அதிகாலை

# இரத்த அழுத்த நோயும், ஜோதிடமும்.

— கா. சின்னையா, சங்குவாரி, கம்பளை. —

சமீபகாலமாக மக்களிடையே வளர்ந்து வருகின்ற நோய் பெரும்பாலும் இருதயநோயும் மாரடைப்புமாக இருப்பதைக் காண்கிறோம். மனிதர்களின் உடல் அமைப்பின் கூறுகளைக் கொண்டு, பழக்க வழக்கங்களையும், உணவு வகைகளையும் முறைப்படுத்தி இருதயநோயைப் பரிசீலனைசெய்து அதற்கான சிகிச்சைகளைச் செய்து வந்தாலும் கூட இந்நோய்க்குத் தினந்தினம் எத்தனை எத்தனை உயிர்கள் பலியாகி வருகின்றனர் என்பதை யாவரும் அறிந்ததே! மருத்துவத்தில் இற்றைக்கு ஏற்பட்டுள்ள சிக்கல்களைப் போன்று என்றுமே ஏற்பட்டதில்லையெனலாம். நாளொரு விசித்திரமான வியாதிகளும், பொழுதொரு மருந்துகளுமாக வளர்ச்சியடைந்து வருகிறதைக் காண்கிறோம். வைத்தியத்தில் கைதேர்ந்த டாக்டர்களும் நிபுணர்களும் அறியமுடியாத வகையில் நோய்கள் வளர்ந்து கொண்டிருப்பதை அவர்களே ஏற்றுக் கொள்வதுடன் குறிப்பிட்ட ஒரு வியாதிக்கு இது தான் காரணம் என்று உறுதியாகக் கூற அவர்களால் இயலவில்லை. பல மருந்துகளைச் சோதித்த பின்னரே ஓரளவிற்குக் காரணம் காணமுடிகின்ற நிலையாகும்.

ஆனால் நமது முன்னோர்களாகிய மஹரிஷிகள் இவற்றிற்கெல்லாம் காரணம் பூர்வபுண்ணியம் என்பதையும் அதன் பயன்தான் மனிதனுக்கு விளையும் நோய்களும் என்பதைத் திறமையான முறையில் தெளிவாக உணர்த்தியுள்ளனர். எனவே மருத்துவத்தில் ஜோதிடத்தையும் சேர்த்து செயல் படுத்துவதாயின் பல சிக்கல்களின் தன்மையை மிக எளிதாக அறிந்து அவற்றிற்கு ஏற்ற சிகிச்சைகளை அளிக்க முடியும்தானே!

ஹிந்து ஜோதிட சாஸ்திரத்தில் இருதயத்திற்கும் சூரியனுக்கும் உள்ளதொடர்பை விளக்கமாகத் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். ''ஹிருதரோஹம் மமஹ சூர்ய'' என்பதிலிருந்து இருதய நோய்களுக்கும் சூரியனுக்கும் உள்ள தொடர்பை அறிவித்துள்ளார்கள்.

இரத்த அழுத்தநோய் கிரக அமைப்புக்களிலும் ஜாதக அமைப்பினாலும் ஏற்படும் எனச் சொல்லப்பட்டிருக்கிறது; அதாவது லக்னாதிபதி பலமில்லாமல் அசுபர்களின் சேர்க்கையினால் மேலும் பலமிழந்து- சனி செவ்வாய் இவர்களின் பார்வை சேர்க்கை அமைந்திருப்பினும் அல்லது சூரியன் லக்னாதிபதியாக சனி செவ்வாய் இவர்களின் சேர்க்கை பெற்றிருந்தாலும் சூரியன் சனியின் வீட்டில் அமர்ந்திருந்தாலும் இரத்த அழுத்த நோய்க்கு அந்த ஜாதகன் ஆளாகவேண்டி வரும் என்றும் ராகு, செவ்வாய், சூரியன் இவர்கள் தான் இருதய நோய்க்கும், இரத்த அழுத்த நோய்க்கும் முக்கிய காரகர்களும் என்று சொல்லப்படுகிறது. இப்படியே ஏனைய நோய்களும் அவரவர்களின் கிரக அமைப்புக்களினாலும் ஜாதக அமைப்புக்களினாலும் விஞ்ஞான ஜோதிட ரீதியாக அறிந்துகொள்ள இயலுமாதலால் - இன்று எப்படி சட்டத் தொகுப்புகளிலும், ஏனைய துறைகளிலும் மருத்துவம் சேர்க்கப்பட்டு இயங்குகிறதோ அதே முறையில் "மருத்துவ ஜோதிடக்கலையும்" (Medical Astrology) வளருமேயானால் மிக மிகப் பலனுள்ளதாக அமையலாம் என்பது எமது கருத்து.

இருதயநோய் ஒரு காலத்தில் நாகரிகமான தனவந்தர்களின் வியாதியாக இருந்தன. ஆனால் இன்று அதுவே உலகில் ஒரு மாபெரும் வியாதியாக மாறி ஒவ்வொருநாளும் ஆயிரக்கணக்கான மக்களின் உயிரைக் குடித்து வருகின்றது.

மாரடைப்பினால் மரணமடைபவர்கள் அதன் கொடூரத்தன்மை எந்த நிமிஷத்தில் தன்னைத் தாக்கும் என்று அறியாமலேயே திடீரென்று அதற்குப்பலியாகி விடுகின்றனர். ஒரு புறம் - இருதயங்களைச் செயற்கைமுறையில் மாற்றி அமைப்பதும், ரணசிகிச்சை மூலம் இயக்கம் பெறச்செய்வதும் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கிறது. மற்றொருபுறம் இருதயநோயால் பலர் மரணம் அடைந்து கொண்டுதான் இருக்கின்றனர்.

இந்தவகையில் ஜோதிடம் குறிப்பிட்ட இந்த இருதயநோயை முன்கூட்டியே எப்படி அறிந்து கொள்ளமுடிகிறது என்பதை எவ்வளவு தெளிவாக ஜோதிஷ நிபுணர்கள் அறிந்து வைத்திருக்கிறார்கள் என்பதைப் பார்ப்போம்.

ஜூலை மாதத்தில் சூரியன் கடகராசியில் சஞ்சரிக்கின்ற காலத்தில் சூரியனுக்கும் பூமிக்கும் இடையிலுள்ள தூரம் அதிகமாக இருப்பதின் காரணமாக அண்டவெளியின் இயக்கம் குறைகிறதென்றும் அதேமுறையில் மனிதஉடற் கூறுகளின் இயக்கமும் ஒருபுதிய நிலையை அடைகின்றதென்றும், சூரியன் மகரரேகையில் சஞ்சரிக்கும் காலமாகிய ஜனவரி மாதத்தில் சூரியனுக்கும் பூமிக்கும் இடைவெளி மிக நெருக்கமாக இருப்பதால் ஒளிக்கதிரியக்கம் சாதாரண நிலையைக்காட்டிலும் அதிகப்படுகின்றதென்றும் கூறப்படுகிறது, இயற்கையாகக் கடகலக்னத்தில் பிறந்தவர்கள் சக்தி குறைந்தவர்களாகவும், ஏனையோரின் புத்திமதிகளை ஏற்காத மனப்பாங்குடையவராகவும் இருப்பதைக் காணலாமாம். கடகமானது ராசிச்சக்கரத்தில் இருதயத்தையும், வயிற்றுடன் இணைந்த நரம்பு மண்டலத்தையும் ஆள்கிறபடியாலும் அத்தகைய ஜாதகன் இருதய நோய்க்கும் மார்பு வலிக்கும் நிச்சயமாக ஆட்பட வேண்டுமென்பதாகிறது. பொதுவாகக் கடக லக்னக்காரர்கள் மிதமிஞ்சிய தவறான உணவினாலும் கடகத்தில்- மகரத்தில் சூரியன் இருப்பதும் இவர்கள் இருதய நோயால் அவதியுற நேரும் என்பதாகிறது. இத்தகைய நிலைகளை ஜோதிஷக் கலையால் முன்னரே அறிந்து அதற்கேற்ற முன் எச்சரிக்கையான சிகிச்சைகளைப் பெற ஜோதிஷக்கலை உதவுகிறது.

மேலும் இருதய நோய்களுள் எப்படிப் பல்வேறு கூறுகள் இருக்கின்றனவோ அதேமுறையில் அவைதக்குறிப்பிடும் நவநாயகர்களும் வேறுபடுவர் ஆயினும் சூரியன் பாபியாகி, கொடூரமான தன்மை பெற்றால் கண்டிப்பாக இருதயநோயால் அவதியுறநேரிடும் என்பதாம். சூரியன் கேதுவினால் பார்க்கப்பட்டால் இருதயமானது சரியான இயக்கம் பெறாத மற்ற உறுப்புக்களின் மூலம் விஷச்சத்துக்கள் உற்பத்தியாகி அதனால் பலவீனமாக இருக்குமாம்.

எனவே ஒவ்வொருவரும் கிரகரீதியில் - தத்தமக்கேற்பட விருக்கும் வியாதிகள் அதற்கான தோஷபரிகாரங்கள் முதலியவைகளை அறிந்து பயன் பெறுவரர்களாக.

பாலைவனத்தில் தவிப்பவனுக்குத் தண்ணீராகவும், தண்ணீரில் தத்தளிப்பவனுக்கு ஓடம்போலவும், ஓடத்தைக் கரைசேர்க்க உதவும் துடுப்புப் போலவும் இருந்து 'ஜோதிடம்' மனிதனுக்கு உதவி செய்கின்றது என்கிறது தர்மசாஸ்திரம்.

# தனு லக்ன ஆணும் கற்கடக லக்னப் பெண்ணும் சேர்வது நன்மையானதா?

வே. சின்னத்துரை - நல்லூர்

இந்தச் சம்பந்தம் கொஞ்சமென்றாலும் ஒத்துப் போக வேண்டுமானால் இரு பங்காளிகளும் சண்டை, அமளி துமளி, தர்க்கம் முதலியவனற்றில் கூடுதலாக ஈடுபட நேரும். அவனுடன் முழு வாழ்வையும் வாழ ஆயத்தமாயிருக்க வேண்டும். மிதந்துகொண்டிருக்க முடியாது. சமூக சமுதாய வாழ்க்கையில் ஈடுபட அவருக்கு அதிக விருப்பமாயிருக்கும். அதே பாணியை அவளிடமிருந்து அவர் எதிர்பார்ப்பார். வீட்டில் தங்கியிருந்து, நல்லஉணவருந்தி, ரெலிவிஷனைப் பார்த்துக்கொண்டிருக்க விரும்பும் அவளை தன்னுடன் வெளியில் சென்றுவர அவன் அழைப்பதில் முயல்வான். இதில் அவன் தோல்வி கண்டால் அவன் தனியாகவே சென்று உணர்ச்சிவசப்படும் வேறு இடங்களை தேடுவான். வேறு பெண்களைப் பார்ப்பதிலும், அவர்களுடன் கூடித்திரிவதிலும் தான்தடை செய்யப்பட்டவனென்று அவன் கருதமாட்டான். இந்தக் கொள்கைதான் இவருடைய காதல் என்னும் கொள்கை. இப்படி இவர் செய்யும்போது நடிப்பது போல் அவள் நடந்துகொண்டால் தான் இவளைத் தேர்ந்தெடுத்தது மகாதப்பிதமென்பதை அவன் உணர்வான். இவர் ஒரு தாராள சிந்தையுடையவர். அதிர்ஷ்டசாலி. அழகு மிகுந்தவர். ஆதலால் விடுதலை என்றால் என்ன என்னும் அவனுடைய சித்தாந்தத்தில் அவள் பழகிக்கொள்ள வேண்டும். இவை அவளுக்கு ஏற்றதாகாவிட்டால் அவனுடன் நட்பாயிருப்பது ஓர் வில்லங்கமான காரியம்.

பாலுறவில் தனுகாரர் மிகவும் ஆர்வமுள்ளவர். அவளுடைய விருப்பங்களை அவர் எளிதில் திருப்திப்பண்ணி விடுவார். படுக்கையறை கேளிக்கைகளில் பலவற்றை நீ அனுபவிக்கவில்லை. தவறவிட்டுவிட்டாய் என்று அவளுக்கு உணர்த்துவார். அவளது அன்றாட வழக்கத்தில் அவர் ஒரு அவசரக் குடுக்கையானாலும் இதை அவர் ஒரு போட்டியாக எடுத்து அவளுடைய மிருக குணத்தை தூண்டுவதில் வெற்றியீட்டுவார்.

ஒரு காதல் — வெறுப்பு சம்பந்தமாகும்.

# எண் சோதிடமும் அதன் உண்மைகளும்

## 2. எண்களும் கிரகங்களும்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

பூமியில் உள்ள நாம் உண்மையில் ஒவ்வொரு கிரகத்தின் வேகத்தையும் கவனிப்போம்;

சந்திரன் மிக அதிவேகத்துடன் சுற்றி வருகின்றான், இதற்கு அடுத்தபடியாக புதன் சிறிது குறைந்த வேகத்துடன் சுற்றி வருகின்றான். இதைவிட குறைந்த வேகத்துடன் (சுக்கிரன்) வெள்ளி வலம் வருகிறான். அடுத்து சூரியன் இப்படியாக செவ்வாய், வியாழன், சனி முதலியோர் படிப்படியாக குறைந்த வேகத்துடன் சுற்றி வருகிறார்கள்.

'பவானி' — பருத்தித்துறை

எனவே கிரக வேகத்தின்படிவரிசைப்படுத்தும் போது சந்திரன், புதன், வெள்ளி, சூரியன், செவ்வாய், வியாழன், சனி, என்ற முறையில் அல்லது சனி, வியாழன், செவ்வாய், சூரியன், வெள்ளி, புதன், சந்திரன் என அமைகின்றன. இதுதான் முறையாகும்.

இதனால் கிரகங்களின் வேகத்தையோ அல்லது தூரத்தையோ வைத்துக் கொண்டு எண்களையும் முறையே வரிசைக் கிரமத்தில்


| | | |
|---|---|---|
| சந்திரன்—1 | புதன்—2 | வெள்ளி—3 |
| சூரியன்—4 | செவ்வாய்—5 | வியாழன்—6 |
| சனி—7 | | |

அல்லது

| | | |
|---|---|---|
| சனி—1 | வியாழன்—2 | செவ்வாய்—3 |
| சூரியன்—4 | வெள்ளி—5 | புதன்—6 |

சந்திரன்—7 என்றெல்லாம் வகுக்கலாமா?

சூரிய சித்தாந்தத்தின் படி தூரங்களின்படி கிரகங்களை வரிசைப்படுத்தி (சனி, வியாழன், செவ்வாய், சூரியன், வெள்ளி, புதன், சந்திரன்) வாரத்திலுள்ள ஒவ்வொரு நாட்களிலும் அவை ஆதிக்கம் செலுத்தும் விதத்தின்படியும் அக்கோள்களின் பெயரால் நாட்களைக் குறித்தார்கள்.




இங்கு மணிக்கூட்டின் முட்கள் செயற்படும் பாதை போல ஒரு கிரகத்திலிருந்து எண்ணிவரும் போது ஐந்தாவதாக வரும் கிரகம், அக்கிரகம் ஆளும் நாளுக்கு, முந்திய நாளை ஆளுகின்றது. உதாரணத்திற்கு சனிக்கிழமையில் சனி ஆதிக்கம் செலுத்துகின்றது. எனவே சனியில் இருந்து எண்ணிவரும் போது ஐந்தாவது இடத்தில் வெள்ளி காணப்படுகின்றது. எனவே சனிக்கிழமைக்கு முந்திய நாள் வெள்ளி (சுக்கிரன்) ஆட்சி செலுத்தும் நாள் வெள்ளிக்கிழமையாகும். இப்படியாக மற்றவையும் அமைகின்றன.

ஒருமின் குமிழ் 100W உடையது. அதனால் அது அன்றும் 100Wக்குரிய சக்தியை, ஒளியை வெளியிடும்; அதற்கும் தூரத்திற்கும் சம்பந்தமில்லை. எனவே எண்களுக்கும் தூரத்திற்கும் அல்லது வேகத்திற்கும் சம்பந்தமில்லை. எண்களின் சக்திப் பரிமாற்றத்தைத்தான் நாம் ஆராய்கின்றோம். எனவே பராசரரின் இம்முறையும் தவிர்க்கப்பட வேண்டும்.

பொதுவாக சூரியனுக்கு எண் 1-ம் சந்திரனுக்கு எண் -2ம் வகுத்ததை எல்லோரும் ஏற்றுக்கொள்கின்றார்கள். இதைவிடுத்து சிலர் பின்வரும் முறை


யைக் கையாள்கின்றார்கள். சனி-7, குரு-6, செவ்வாய்-5, சூரியன்-4, சுக்கிரன்-3, புதன்-2, சந்திரன்-1.

இம்முறையில் சூரியன் சந்திரன் முதலியோருக்கு முறையே எண்கள் 4,1 முதலியவைகளைக் கொடுப்பதன் அர்த்தம் என்ன? முன்பு கூறியது போல் பூமிக்கும் அக்கிரகங்களுக்கும் இடையில் உள்ள தூரத்தைக் குறிக்கின்றனவா? இதுவா சூரிய சித்தாந்தம்?

பூமிக்கு மிக அருகில் சந்திரன் இருப்பதால் அதற்கு எண்-1ம் சந்திரனுக்கு அருகில் புதன் காணப்படுவதால் அதற்கு எண்-2ம் கொடுக்கப்பட்டதா?

உண்மையில் வான்வெளியில் பூமிக்கு அடுத்துச் சந்திரனும், சந்திரனுக்கடுத்து சுக்கிரனும் இதற்கு அடுத்துப் புதனும், புதனுக்கு அடுத்து சூரியனும் காணப்படுகின்றது. எனவே சந்திரனுக்கு அருகே புதன் காணப்படுகின்றது என்பது தவறாகும்.

அடுத்து சுக்கிரன் காணப்பட்டதால் சுக்கிரனுக்கு எண்-3ம் அடுத்து சூரியன் காணப்பட்டதால் சூரியனுக்கு எண்-4ம் என்றெல்லாம் தீர்மானிக்கப்பட்டதா? இவையெல்லாம் பூமியிலிருந்து தூரத்தைவைத்து கணிக்கப்பட்டிருந்தால் அதுவும் தவறானதே. பூமிக்கு அருகில் காணப்படுவது சந்திரனாகும். இதற்கடுத்து சுமார் 26மில்லியன் மைல்கள் தூரத்தில் சுக்கிரன் காணப்படுகிறது. பூமியின் பாதையின் வெளிப்புறத்தில் சுமார் 48.7 மில்லியன் மைல்கள் தூரத்தில் செவ்வாய்க் கிரகம் காணப்படுகின்றது. அதேவேளையில் பூமியின் உட்பாதையில் 57மில்லியன் மைல்கள் தூரத்தில் புதன் காணப்படுகிறது. அடுத்து வெளிப்புறத்தில் 90 மில்லியன் மைல்கள் தூரத்தில் வியாழன் காணப்படுகின்றது. இதேவேளையில் பூபாதையின் உட்பாதையில் சூரியன் 93 மில்மியன் மைல்கள் தூரத்தில் காணப்படுகிறது. பூமியில் இக்கிரகங்களின் தாக்கம் அவைகள் நின்ற தூரத்தில் தங்கியிருந்தால் அவை பின்வருமாறு வரிசைப்படுத்தப்பட வேண்டும்.




சந்திரன், சுக்கிரன், செவ்வாய், புதன், குரு, சூரியன், சனியென அமைதல் வேண்டும். இப்போது இவைகளுக்கு எண்களை எப்படி வகுத்தல் வேண்டும் என்பதை வாசகர்கள் தீர்மானிக்கட்டும்.

சரி, வாரத்திற்கு தூரத்தை எடுத்துக்கொள்வோம். பூமியிலிருந்து சூரியன் 91,444,000 மைல்கள் தொடக்கம் 94,556,000 மைல் வரையில் உள்ளது. அதாவது சராசரி தூரம் 93,000,000 மைல்களாகும்.

இதேபோல சந்திரன் பூமியிலிருந்து 225,463 மைல் தொடக்கம் 252,710 மைல் வரையில் உள்ளது. எனவே சராசரிதூரம் 239,088 மைல்களாகும். இத்தூரத்தில் இருக்கும் சந்திரனுக்கு எண்-1 வகுக்கும்போது வெறும் தூரத்தையே வைத்து எண் வகுப்பதனல் 93,000,000 மைல் தூரத்தில் இருக்கும் சூரியனுக்கு என்ன எண் வகுத்தல் வேண்டும் என்பதையும் வாசகர்களே தீர்மானிக்கட்டும்.

எனவே, வெறும் வேகத்தையோ அல்லது தூரத்தையோ வைத்துக்கொண்டு கிரகங்களுக்கு எண்கள் வகுப்பது தவறல்லவா? சக்தியைவைத்து எண் வகுப்பதும் அல்லது எண்ணை வைத்துக் கொண்டு சக்தியை அல்லது பலனை ஆராய்வது தான் எண்சோதிடம்.

சோதிடத்தில் சூரியனுக்கும் சந்திரனுக்கும் ஒவ்வொரு ராசிதான் கொடுத்து அவைகளின் சிறப்பையும் தனித்துவத்தையும் உணர்த்தியிருக்

# ஐப்பசியில் திருக்கார்த்திகை கொள்ளலாமா?

க. செந்தூரன், கொக்குவில்.

சந்: திருக்கணித பஞ்சாங்கப்படி கார்த்திகை 1-ந் திகதி (16-11-86) திருக்கார்த்திகை விரதம் எனவும், வாக்கிய பஞ்சாங்கப்படி ஐப்பசி 30-ந்திகதி (16-11-86) திருக்கார்த்திகை விரதம் எனவும் குறிக்கப்பட்டுள்ளன. திருக்கார்த்திகை விரதம் கார்த்திகை மாதத்திலல்லவா வரவேண்டும். ஐப்பசியில் கொள்வது சரியா?

நிவி: திருக்கார்த்திகைவிரதமும், ஸர்வாலயதீபமும் சௌரமானப்படி (சூரிய மாதப்படி) கொள்ளப்படுபவையாகும்; திருக்கணித பஞ்சாங்கப்படி கார்த்திகை மாதத்தில் வரும் பௌர்ணமித்தினத்தில் ஸர்வாலயதீபமும், கார்த்திகை நட்சத்திரத்தில் திருக்கார்த்திகையும் கொள்ளப்பட்டிருக்கின்றது. அன்று பௌர்ணமியுடன் கார்த்திகை சேர்ந்து வருவதும் விசேடமாகும். வாக்கிய பஞ்சாங்கத்தில் ஐப்பசி மாதத்திலேயே இவை இரண்டும் கொள்ளப்பட்டுள்ளன. எப்படியிருப்பினும் இவை கார்த்திகை மாதத்திலேயே வரவேண்டும். வாக்கிய பஞ்சாங்கத்தினர் கடந்த காலங்களிலும் பல விரதங்கள், முக்கிய விசேடதினங்களை பிழையாகக் குறித்து வருகின்றனர். இச்சந்தர்ப்பங்களில் பொதுமக்கள் எதுசரி எதுபிழை என அறியாது தடுமாற்றமடைகின்றனர். ஐப்பசி மாதத்தில் குறிக்கப்பட்ட திருக்கார்த்திகை பிழையானதாகும். வாக்கிய கணிதரும் இதனை ஏற்றுக்கொள்வார் என்பதில் சந்தேகமில்லை.

வை.சண்முகசுந்தரம், வண்ணார்பண்ணை.

சந்: வாக்கிய பஞ்சாங்கத்தில் வைகாசி 5உ செவ்வாய் மகரத்துக்கு மாறுவதாகவும், திருக்கணித பஞ்சாங்கத்தில் புரட்டாதி 10உ மகரத்துக்கு மாறுவதாகவும் குறிப்பிட்டிருந்தது. இதில் எது சரி? வைகாசி 5உ தானே யாழ்ப்பாணத்தில் குண்டு விழுந்தது.

நிவி: கிரகநிலைகளை திருக்கணித பஞ்சாங்கமே சரியாகக் கணித்து வெளியிடுகின்றது. செவ்வாய் நிற்கும் இராசியை மாலைநேரங்களில் வானத்தில் பார்த்து நேரடியாக அறியலாம்; சந்திரனோடு கிரகங்கள் சமாமகம் ஏற்படும் காலங்களில் இன்னும் இலகுவாக அறிந்து கொள்ளலாம். உதாரணமாக, எதிர்வரும் 13-11-86இல் சூரியனும், புதனும் ஒரே பாகையிலிருந்து சந்தரணம் அடையும், இது திருக்கணித பஞ்சாங்கப்படியே சரிவர நிகழ்வதை அவதானிக்கலாம். செவ்வாய் மகரத்தில் இருப்பதால் குண்டுவிழ வேண்டும் என்ற நியதி இல்லை.

க. சசிரேகா, கொடிகாமம்.

சந்: 9-12-1952 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4-35க்குப் பிறந்த எனது நட்சத்திரம் கிரகநிலை என்பவற்றை அறியத்தருக.

நிவி: உதயலக்னம்- இடபம்; நட்சத்திரம்-பூரம் 3-ம் பாதம்; இராசி- சிங்கம்; மேடத்தில் - குரு கடகத்தில்- கேது; சிங்கத்தில் - சந்திரன்; துலாத்தில்- சனி; விருச்சிகத்தில் - சூரியன், புதன்; மகரத்தில் - செவ்வாய், சுக்கிரன், ராகு.

## சந்தேக நிவிர்த்தி ''மகம்''

க. சிவசுப்பிரமணியம், மீசாலை.

சந்: எதிர்வரும் 13-11-86 வியாழக்கிழமை ''புத சந்தரணம்'' என்னும் காட்சி நிகழும் என திருக்கணித பஞ்சாங்கத்தில் குறிக்கப்பட்டுள்ளது. வாக்கிய பஞ்சாங்கத்தில் இதைப்பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லையே! கிரகணங்களின்போது இருபஞ்சாங்கங்களும் கிரகணம் நிகழுமா இல்லையா என்பதைச் சரிவரக் குறிப்பிட்டு வரும்போது புதசந்தரணத்தில் மட்டும் வித்தியாசம் ஏன்?

நிவி: புதசந்தரணம் நிகழ்வதால் குறித்த புதன் என்னும் கிரகமும், சூரியனும் ஒரே ராசியில், ஒரே நட்சத்திர பாதத்தில் இருக்குமென்பதை அறியலாம். திருக்கணித பஞ்சாங்கம் 37-ம் பக்கம் சூரியபாதசாரத்தைப் பார்க்கவும். ஐப்பசி 28-ந் திகதி (13-11-86) காலை விசாகம் 3-ம் பாதத்தில் சூரியன் சஞ்சரிக்கின்றது. 39-ம் பக்கம் புதன் பாதசாரத்தில் அன்று காலை புதனும் விசாகம் 3-ம் பாதத்திலேயே இருக்கின்றது. இரு கிரகங்களும் விசாகம் 3-ம் பாதத்தில் இருப்பதால் புதசந்தரணம் நிகழ இடமுண்டு என்பது பெறப்படுகின்றது. வாக்கியப் பஞ்சாங்கப்படி குறிப்பிட்டதினத்தில் 40-ம் பக்கத்தில், சூரியன் பாதசாரம்- விசா

கம் 2-ம் பாதத்தில் சூரியனும் 42-ம் பக்கத்தில் புதசாரப்படி புதன் சுவாதி 2-ம் பாதத்திலும் இருக்கின்றன. எனவே இவ்விரு கிரகங்கட்கும் இடைத்தூரம் ஏறக்குறைய 14பாகை வரைவரும். இதனுல் வாக்கிய பஞ்சாங்கத்தினர் புதசந்தரணத்தைக் குறிக்கவில்லை. ஆனுல் உண்மையில் புதசந்தரணம் நிகழத்தான் போகின்றது. இதனை தூர திருஷ்டிக் கண்ணுடியின் உதவியுடன்தான் பார்க்க வேண்டும். இக்காட்சியின் மூலம் வாக்கியபஞ்சாங்க கணிதத்தில் ஏற்படும் பிழையையும் திருக்கணித பஞ்சாங்கத்தின் துல்லியமான கணிப்பையும் மக்கள் உணரத்தான் போகின்ருர்கள். கிரகணம் சாதாரணமாக எல்லோருடைய கண்ணுக்கும் தெரியக் கூடியதாகையால் திருக்கணிதமுறையைப் பின்பற்றிச் சரிவர வெளியிட்டு வருகின்ருர்கள். புதசந்தரணத்தில் அவ்வாறு செய்தால் கிரகநிலையில் வித்தியாசம் ஏற்பட்டுவிடுவது எல்லோருக்கும் தெரிந்துவிடுமல்லவா?

புதசந்தரணக்காட்சியை திருக்கணித பஞ்சாங்கம் மட்டுமல்ல, இந்தியாவிலிருந்து வெளிவரும் பல பஞ்சாங்கங்கள், வெளிநாடுகளிலிருந்து வரும் எபமெரிஸ், இலங்கையில் சிங்களபாஷையில் வெளிவரும் ஏப்பா, இறநம என்பனவையும் வெளியிட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

செ. சிவயோகம், மாத்தளை.

சந்: 25-6-1963 இரவு 1-45க்குப் பிறந்த எனது நட்சத்திரம், உதயலக்கினம், கிரகநிலை என்பவற்றைக் கூறுக.

நிவி: உதயலக்னம் - மேடம்; நட்சத்திரம் - ஆயிலியம்; சந்திரராசி - கடகம்; இடபம் - சுக்கிரன், புதன்; மிதுனம் - சூரியன், ராகு; கடகம் - சந்திரன்; சிங்கம் - செவ்வாய்; தனு - கேது; மகரம் - சனி; மீனம் - குரு.

V. கமலா, கொழும்பு:

சந்: 13-8-1945 பகல் 10-10க்கு கொழும்பில் பிறந்த எனது நட்சத்திரம், ராசி, லக்கினம், கிரகநிலை என்பன யாது?

நிவி: உதயலக்னம் - கன்னி; நட்சத்திரம் - சித்திரை 1-ம் பாதம்; சந்திரராசி - கன்னி; இடபம் - செவ்வாய்; மிதுனம் - சுக்கிரன், சனி, ராகு; கடகம் - சூரியன், சிங்கம் - புதன்; கன்னி - குரு, சந்திரன்; தனு - கேது.

எண்சோதிடமும்........ (20-ம் பக்கத் தொடர்ச்சி)

கின்ருர்கள். அவர்களுக்கு அளித்த ராசிகளும் அருகருகே அமைந்து அவைகளின் நெருக்கத்தை சிறப்பித்திருக்கின்ருர்கள். ஆனுல் மற்றும் கிரகங்களுக்கு இரண்டு இராசிகளாக வகுக்கப்பட்டிருந்தன.

சூரியன் தந்தையானுல் சந்திரன் தாயைக் குறிக்கும். ஒரு தாய்தந்தைக்கு ஒன்று அல்லது இரண்டு அல்ல பல குழந்தைகள் இருக்கலாமேயொழிய ஒரு குழந்தைக்கு இரண்டுதாய் அல்லது இரண்டு தகப்பன் இருக்கமுடியாது. மூலம் ஒன்றுதான். எனவே எல்லா எண்களுக்கும் மூலம் ஒன்றுதான். இதேபோல் எல்லாக் கோள்களுக்கும் மூலமாகிய சூரியன்தான் ஒன்று.

சூரியனும், சந்திரனும் ஒளிக்கிரகங்கள் என்று கூறும்போது இராகு, கேது யாவும் நிழல்கிரகம் என்பர். நிழல் என்னும்போது ஒளியும் நினைவு வருகிறது. ஒளி இல்லையேல் நிழல் ஏது? எனவே சூரியனும் சந்திரனும் இல்லையேல் இராகு கேது ஏது? இவைகள் ஒளியும் நிழலும்போலப் பிரிக்க முடியாத தொடர்புடையன.

சூரியனைப் பூமி எப்போதும் வலம் வந்து கொண்டிருப்பான். இதேபோல் சந்திரன் பூமியை எப்போதும் வலம்வந்து கொண்டிருப்பான். இவ்விரு பாதைகளும் இருபுள்ளிகளில் வெட்டப்படுகின்றன. இவ்விரு வெட்டுப்புள்ளிகள் தான் இராகு கேது என்பர். இதனுல் சூரியனுக்கும் சந்திரனுக்கும் இராகு கேதுக்களுக்கும் பலவிடயங்களில் நெருங்கிய தொடர்புகள் ஏற்படுகின்றன. எண்களில் 1ல் இருந்து 9 வரையும் எவ்வளவு முக்கியமானதோ அவ்வளவுக்கு 7கிரகங்களும் இரண்டு நிழல்களும் (இராகு, கேது) முக்கியமாகிவிட்டன.

இப்பூமிமீது சூரியனும் சந்திரனும் வலிமையான ஆதிக்கம் செலுத்துவதை யாவரும் ஏற்றுக்கொள்கின்றனர். இக்கிரகங்களுடன் பிணைந்து கிடக்கும் இப்புள்ளிகளும் பூமியில் தங்கள் ஆதிக்கத்தைக் காட்டுகின்றன. இதனுல் சூரியன் சந்திரன் முதலியோரின் ஆதிக்கத்தை ஆராய்ந்து கணித்து பலன் கூறுமிடத்து இராகு கேது முதலியோரையும் தவிர்க்கமுடியாமல் இருக்கிறது.

(வளரும்)

# நடிகைகளில் ராணியாக வருவேனா?

(சென்ற இதழ் தொடர்ச்சி)

| | | | |
|---|---|---|---|
| சனி 25 54<br>ரா 10 35<br>XI 6 41 | XII 10 41 | I 13 53 20 | II 10 41 |
| சுக் 17 11<br>X 4 41 | 14-1-1969<br>சென்னை<br>எண் 32<br>நேரம்:<br>பிற்பகல் 1-30 | | III 6 41 |
| புத 19 32<br>IX 6 41<br>சூரி 0 39 | | | IV 4 41 |
| VIII 10 41 | சந் 6 30<br>VII 13 53 | செவ் 15 20<br>VI 10 41 | V 6 41<br>கேது 10 35<br>குரு 12 40 |

குறிகாட்டிகளின் அட்டவணை

| கிரகம்: | | பாவங்கள்: |
|---|---|---|
| சூரியன் | — | 8,4 |
| சந்திரன் | — | 11,10,9,6,3 |
| செவ்வாய் | — | 11,8,6,12,7 |
| புதன் | — | 6,3,9,2,5 |
| வியாழன் | — | 6,3,5,11,8 |
| சுக்கிரன் | — | 11,8,10,1,6 |
| சனி | — | 9,2,5,11,10 |
| இராகு | — | 11,10,9,8 |
| கேது | — | 6,3,2,5 |

| பாவங்கள் | | குறிகாட்டிகள் |
|---|---|---|
| I | — | சுக்கிரன் |
| II | — | புதன், சனி, கேது |
| III | — | சந்திரன், புதன், குரு, கேது |
| IV | — | சூரியன் |
| V | — | புதன், குரு, சனி, கேது |
| VI | — | சந்திரன், செவ்வாய், குரு, புதன், சுக்கிரன், கேது |
| VII | — | செவ்வாய் |
| VIII | — | சூரியன், செவ்வாய், குரு, சுக்கிரன், இராகு |
| IX | — | சந்திரன், புதன், சனி, இராகு |
| X | — | சந்திரன், சுக்கிரன், சனி, இராகு |
| XI | — | சந்திரன், செவ்வாய், குரு, சுக்கிரன், சனி, இராகு |
| XII | — | செவ்வாய் |

5-ம் பாவம் கலைத்திறன், பொழுதுபோக்கு விளையாட்டு, விருந்தோம்பல், சினிமா, நாடகம், சங்கீதம், நடனம், சீட்டாடல், லாட்டரி, சூதாட்டம், காதல் விடயங்கள் மந்திர உபதேசம் முதலியவைகளைக் குறிக்கும்.

எனவே 5-ம் பாவ முனையை ஆராயுங்கள். இம்முனை புதன் ராசி சூரியசாரம் புதன் உப நட்சத்திரத்தில் நிற்கிறது. உப நட்சத்திராதிபதி புதன் எந்த நட்சத்திரத்தில் நிற்கின்றான்? சந்திரனுக்குரிய திருவோண நட்சத்திரத்தில் புதன் நிற்கின்றான்.

இதனால் சந்திரன் 6-ம், 10-ம், 11-ம், 5-ம் வீடுகளுடன் சம்பந்தப்படும்போது இவர் பிரபல நடிகையாவார்.

---

'பவானி' — பருத்தித்துறை

---

சந்திரன் (சனிசாரம்) புதன் (5-ம் வீட்டதிபதி உபநட்சத்திரத்தில் நிற்பதால் சினிமாவுடன் சம்பந்தம் ஏற்படுகின்றது.

சந்திரன் 5-ம், 6-ம், 10-ம் வீடுகளுடன் சம்பந்தப்படுவதால் இவர் பிரபல நடிகையாவார். 11-ம் வீடும் சம்பந்தப்படும் போது மேன்மேலும் முன்னேற்றம் அடைவார். செவ்வாய் இவ்வீடுகளுடன் சம்பந்தப்படும் போது தாழ்வு மனப்பான்மையோ அல்லது மேடைக் கூச்சமோ கிடையாது. பதிலாக தலைவியாக இளவரசியாக விளங்குவார். இவருக்கு வெற்றி உறுதியாகின்றது.

சனி: 5ம், 6ம், 11ம் வீடுகளின் குறிகாட்டியாகும். இதனால் இவரின் விடாமுயற்சி நல்ல பலனைக் கொடுக்கும்.

புதன்: 5ம், 6ம் வீடுகளின் குறிகாட்டியாகும்.

சுக்கிரன்: 6ம், 10, 11ம் வீடுகளின் குறிகாட்டியாகும். பொதுவாக புதன், சுக்கிரன் நடிகர், நடிகை முதலியோரைக் குறிக்கும்.

சுக்கிரன்: 10ம், 11ம், வீடுகளுடன் சம்பந்தப்படுவதால் பெரும் வெற்றியும் பிரபல்யமும் உண்டாகும்.

இராகு: 10ம்,11ம் வீடுகளின் குறிகாட்டியாகும். இதனால் பிரபல்யம், மேன்மேலும் முன்னேற்றம் செல்வச் செழிப்பு யாவும் உண்டாம்.

செவ்வாய்: 6ம்,11ம் வீடுகளின் குறிகாட்டியாக அமைவதால் தலைவி அல்லது இளவரசி தான். இதைவிட வேறு என்ன வேண்டும்?

இதை தீர்மானிக்கும் போது நின்ற தசை சனிதசை 14வருடம் 5மாதம் 26நாள்.

பின்வரும் காலங்களில் தொழிலில் நல்ல வளர்ச்சியும் முன்னேற்றமும் காணப்படும்.

| தசை | புத்தி | அந்தரம் |
|---|---|---|
| சனி | சுக்கிரன் | சுக்கிரன் |
| சனி | சுக்கிரன் | இராகு |
| சனி | செவ்வாய் | சுக்கிரன் |
| சனி | இராகு | இராகு |
| சனி | இராகு | சுக்கிரன் |

இக்காலங்கள் உம்து திறமையையும் சிறப்பையும் காட்டக் கூடியதாக அமையும். அதனால் நீர் இளவரசியாக விளங்குவீர்.

''ஐயா, நீங்கள் ஒரு சந்தேகத்தை கிளப்பி விட்டீர்கள். அதனால் நான் அதை மீண்டும் கேட்கின்றேன். அதற்கு நீங்கள் என்னை மன்னிக்க வேண்டுகின்றேன்''

''கேளுங்கள்!''

''நான் என்றும் இளவரசியாகத்தான் இருப்பேனா அல்லது இராணியாக மாறுவேனா?''

''மீண்டும் சபலம் தட்டுகின்றது. நியாயமான கேள்விதான்! அதையும் சிறிது ஆராய்வோம்''

7ம் பாவமுனை செவ்வாய் ராசி சனிசாரம் இராகு உபநட்சத்திரத்தில் நிற்கின்றது. சனியும் இராகுவும் 11ம் பாவத்தில் நின்றபோதிலும் திருமணத்தைக் கொடுக்காது; நட்புகளைத்தான் கொடுக்கும்.

ஏன்? 6ம் பாவமுனை சுக்கிர ராசி இராகு சாரம் சனி உபநட்சத்திரத்தில் நிற்பதால் சனியும் இராகுவும் 6ம் பாவத்தில் வலிமையான ஆதிக்கம் செலுத்துகின்றார்கள். 6ம் பாவம் 7ம் பாவத்திற்கு விரயஸ்தானமாகும். எனவே நீங்கள் என்றும் இளவரசிதான்!

''உங்கள் பலன் தவறினால்.........!''

''நீங்கள் கொடுத்து வைத்தவர்கள் தான். இன்னும் சிறிது ஆராய்வோம்!''

செவ்வாய் மட்டும் 7ம், 12ம் வீடுகளின் குறிகாட்டியாக அமைகின்றான். அதேவேளையில் 6ல் செவ்வாய் நிற்கின்றான். அதனால் 7ம் வீட்டுப் பலனைவிட 6ம் வீட்டுப் பலனை செவ்வாய் வலிமையாகக் கொடுப்பான்.

சிலசமயம் செவ்வாய் 6ம்,7ம் பாவங்களின் குறிகாட்டியாக அமைந்து, அவன் 7ல் நின்றால் என்ன செய்வான்? முதல் திருமணம் நடக்கும். பின்பு தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ பிரிவு ஏற்படும்.

இச்சாதகத்தில் செவ்வாய் 6ல் நிற்கின்றான். இதனால் எவரையாவது வாழ்க்கைத் துணைவராக நீங்கள் ஏற்றுக் கொள்ள முன்வந்தாலும் அவர் உங்களை கைவிட்டு விடுவார். அதனால் எவரையும் திருமணம் செய்ய முடியாது. இன்று செவ்வாய்க் கிழமை. சந்திரனும் செவ்வாயின் இராசியில் நிற்கின்றான். அதனால் செவ்வாய் வலிமையானது. எனவே சட்ட பூர்வமாக எவரையும் திருமணம் செய்ய முடியாது. நடிகைகளுக்குள் நீங்கள் இளவரசியாகத் தான் திகழ்வீர்கள். பிரஸ்ன சோதிடம் மூலம் உங்கள் விதியைக் கூறியிருக்கின்றேன். இனிமேல் காலம் தான் உங்களுக்கு பதில் சொல்ல வேண்டும்.

---

முக்கிய குறிப்பு:

'சோதிடமலரில்' வெளியாகும் கட்டுரைகளில் வரும் கருத்துக்கள் கட்டுரையாளரின் சொந்தக் கருத்துக்களேயாகும். கட்டுரையாளர்களின் கருத்து வேறுபாடுகளுக்கு ஆசிரியர் பொறுப்பாளியல்லர்.

ஆ-ர்

---


விரைவில் வெளிவருகிறது!

**1987-ம் ஆண்டிற்கான திருக்கணித பஞ்சாங்க மாதக் கலண்டர்**

Registered as a News Paper at the G. P. O. Sri Lanka.





ஓர் நற்செய்தி!

மாணவ மணிகளே!

உங்கள் சீருடைகளை அதிவெண்மையாக்க நுரை வளம் கூடிய மில்க்வைற் நீலசோப்பை வாங்கிப் பாவியுங்கள்.

மில்க்வைற் நீலசோப் புதிய வாசனையுடன் எங்கும் விற்பனையாகின்றது.

★ 200 மேலுறைகளைச் சேகரித்து அனுப்பி அழகிய பாடசாலை பாக் ஒன்றை பரிசாகப் பெற்றுக்கொள்ளுங்கள்.

★ 1987-ம் ஆண்டிற்கான மகாத்மா காந்திக் கலண்டரைப் பெறுவதற்கு இன்றே மில்க்வைற் தயாரிப்புகளின் மேலுறைகளைச் சேகரியுங்கள்.

## மில்க்வைற் தொழிலகம்

த. பெ. இல. 77, யாழ்ப்பாணம் தொலைபேசி: 23233


## சந்தா நேயர்களுக்கு

அன்புடையீர்! அன்பு வணக்கம்.

தங்கள் கைகளில் கிடைக்கும் இச் 'சோதிடமலர்' என்றும் வாடாமலராக உங்கள் இல்லங்களில் நறுமணம் வீசி சகலருக்கும் வழிகாட்டியாக விளங்க வேண்டுமென்பது எமது அவா. தாங்கள் ஒவ்வொருவரும் புதுப்புது அங்கத்தவர்களை அறிமுகம் செய்து வைத்தால் மலரின் வளர்ச்சிக்கு மகத்தான தொண்டு புரிந்தவர்களாவீர்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| சந்தா விபரம்: | இலங்கைக்கு மாத்திரம் | | வருட சந்தா | ரூ 42-0 |
| | வெளிநாட்டுக்கு | (கப்பல் வழி) | வருட சந்தா | ,, 78-0 |
| | மலேசியா | (விமான வழி) | வருட சந்தா | ,, 180-0 |
| | இங்கிலாந்து | (விமானவழி) | வருட சந்தா | ,, 225-0 |

தனிப்பிரதி வேண்டுவோர் ரூபா 3-50 அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

கடிதம், காசோலை முதலியன அனுப்பவேண்டிய முகவரி:

உரிமையாளர் "திருக்கணித நிலையம்" மட்டுவில் வடக்கு — சாவகச்சேரி

Edited by K. Sathasiva Sarma; Printed and Published by S. Sethambaranaatha Ku
Thirukkanitha Nilayam, Madduvil, Chavakachcheri, Sri Lanka. Phone: 280